விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை (11.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழரால் தோற்றேன்!

## முன்னாள் ஜனாதிபதி கவலை




(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலிருந்தும் மலையகத் தோட்டப் பிரதேசங்களிலிருந்தும் அளிக்கப்பட்ட வாக்குகளிலேயே தான் தோல்வியடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது சொந்த ஊராக அம்பாந்தோட்டைக்குச் சென்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## புலிக்கொடி பறக்கவில்லை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கிலுள்ள பல இராணுவ முகாம்களின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றதாக பரப்பப்படும் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரி

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்.செல்வார் ஜனாதிபதி

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதலில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் முதலில் இந்தியாவுக்கு அவர் உத்தியோகபூர்வ பயணம் மேற்

23ஆம் பக்கம் பார்க்க....

## பதவிப்பிரமாண செலவு 6 ஆயிரம்

(கொழும்பு)

நாட்டின் ஏழாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆறாவது ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைத்து நேற்று முன தினம் வெள்ளிக்கிழமை மாலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அந்த பதவிப்பிரமாண வைபவத்துக்காக 6,000ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

புதிய ஜனாதிபதியை வரவேற்ப

23ஆம் பக்கம் பார்க்க....

## தெய்வீகக் கலண்டர்

நாளைய வலம்புரியுடன் திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமானின் திருவுருவம் தாங்கிய வர்ணக் கலண்டர் வெளிவரும்.

பிரதிக்கு முந்துங்கள்.



# புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும்?

## கூட்டமைப்புக்கு முக்கிய அமைச்சு?

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 25 அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 10 அமைச்சர்கள், 25 பிரதி அமைச்சர்கள் என 60 பேர் கொண்ட அமைச்சரவை இன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் கலந்தாலோசித்து இந்த அமைச்சர்கள் மற்றும் அமைச்சு ஒதுக்கீடுகளை மேற்கொள்வார் என்று கூறப்பட்டது.

வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர நியமிக்கப்படுவார். முன்னர் இந்தப் பதவியில் கடமையாற்றிய அனுபவம் அவருக்கு உண்டு. புதிதாக உருவாக்கப்படும் உள்துறை அமைச்சுக்குப் பொறுப்பாக ராஜித சேனாரட்ன நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு புதிய ஜனாதிபதியின் வசமே இருக்கும்.

இதற்கென சரத் பொன்சேகாவுக்கு, தண்டனை விலக்களிக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தை குவிப்பதற்கு மகிந்தவின் உத்தரவை ஏற்க மறுத்த இராணுவத் தளபதி

(கொழும்பு)

கொழும்பு நகரில் இராணுவத்தை நிலைநிறுத்த இறுதி நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ முயற்சி மேற்கொண்டதாகவும், ஆனால், அவரது உத்தரவுக்கு இராணுவத் தளபதி இணங்க மறுத்து விட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர்

24ஆம் பக்கம் பார்க்க..

## இணைந்து செயற்பட தயார்-மூன்

(ஜெனிவா)

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து, அவர் தெரிவித்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை வெற்றி

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சுப் பதவி எதனையும் தமிழ்க் கூட்டமைப்பு ஏற்காது!

(யாழ்ப்பாணம்)

புதிதாக அமையவுள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் பங்கேற்று எந்தவித அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இன்று அமையவுள்ள புதிய அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முக்கிய பொறுப்பு ஒன்றை அளிக்க முன்வந்துள்ளதாக புதிய அரசுத் தலைமை அறிவித்துள்ள நிலையில், தமிழ் தேசியக்

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்புச் செயலராக பஸ்நாயக்க நியமனம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்புத் தலைமைகளில் விரைவில் புதிய மாற்றம்!

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன நாட்டின் உயர் பாதுகாப்புக் கட்டமைப்புகளில் மாற்றங்களைச் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானப் படைத்தளபதி ஏயார் மார்ஷல் கே.ஏ.குணதிலக எதிர்வரும 19 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ள நிலையில், அதன் பின்னர் இந்தப் பதவிக்கு தனக்கு நம்பிக்கையான மூத்த விமானப்படை அதிகாரி ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபால

24ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்புக்கள் தேவை

## ☆ சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் தீர்க்கப்படாது விடப்பட்ட மனிதவுரிமைப் பிரச்சினைகளை புதிய அரசாங்கம் அவசரமாகத் தீர்க்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஐ.நாவின் இந்த விசாரணைகளுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதி இயக்குநர் டேவிட் கிறிபித்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த மனிதவுரிமை நிகழ்ச்சி நிரலில் ஏழு முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அரசியல் யாப்பிலிருந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை, 18வது திருத்தச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதுடன், ஊடகவியலாளர் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். சிறுபான்மை மதத்தினர் மீதான தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் முன்னைய அரசாங்கம் பொறுப்பளிக்கத் தவறியுள்ளது. இத்தகைய மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட பல பத்தாயிரக்கணக்கான இலங்கை மக்கள் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கம் மக்களுக்கு நீதி வழங்கக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இதுவரை மறுத்து வந்த நிலையிலேயே, சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் பரப்புரைகளின் போது வாக்குறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அச்சத்தால் வெளியேறியோர் மீண்டும் நாட்டுக்கு திரும்பலாம்

### ஜனாதிபதி அழைப்பு

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் அச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய மாற்றுக்கருத்துடையோர் மற்றும் ஊடகவியலாளர்களை நாடு திரும்புமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்தின இணையத்தளங்கள்மீதான தணிக்கையை உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார், இது தவிர தொலைபேசிகளை இடைமறித்து ஒட்டுக்கேட்டல், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளை கண்காணித்தல் போன்றவற்றையும் உடனடியாக கைவிடுமாறு கேட்டுள்ளார் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த அரசாங்கத்தின் தாக்குதலுக்கு பயந்து நாட்டை விட்டு தப்பியோடிய ஊடகவியலாளர்கள் மற்றும் மாற்றுக் கருத்துடையோரை நாடு திரும்புமாறும் அவர் அழைத்துள்ளார்.

நேற்று முன்தினத்திலிருந்து நீங்கள் எங்களை விமர்சிக்கலாம், ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் எவருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளதுடன் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டது, தாக்கப்பட்டது குறித்து விசாரணைகள்இடம்பெறும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இன்றைய போட்டி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. (க)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### நவமணியம்மா பாலசுந்தரம்

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திருமதி நவமணியம்மா பாலசுந்தரம் நேற்று (10.01.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சேவையர் பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், பத்மாவதி, காலஞ்சென்ற இராஜேந்திரம், கமலாவதி, பாலேந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வயித்திலிங்கம், மாணிக்கலிங்கம், விநோதினி (சித்திரா), சிவநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசுகி, சுமதி, அகலிகா, வரதன், கோபி, செந்தூரன், கார்த்திகா, அஜந்தன், பிரதீபன், தயாளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பா.பாலேந்திரன் (மகன்) (விலை மதிப்பீட்டாளர்) குடும்பத்தினர்

நா.மு. வீதி,
பருத்தித்துறை. (சி-9804)



திருமதி

### நாகரத்தினம் நடராஜா

V.H ஒழுங்கை இருபாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராஜா அவர்கள் நேற்று (10.01.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், நடேசு, மகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் காசிலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கௌசலாதேவி, கமலாதேவி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), கருணாதேவி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), நகுலேந்திரராஜா, யோகேந்திரராஜா (கணக்காளர்), புவனேந்திரராஜா (கனடா), பவானி (லண்டன்), காமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயரங்கநாதன் (Boat mechanic), ஜெயராஜா, காலஞ்சென்ற பரராஜசிங்கம், ரதிராணி (விரிவுரையாளர்-யாழ்.பல்கலைக்கழகம்), கமலராணி (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), சுதாகரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், ஜனரஞ்சனி (லண்டன்), தட்ஷாயினி (பிரதேச செயலகம் வேலணை), நிலா (கனடா), சாம்பவி (மருத்துவபீடம் - கொழும்பு), சாகித்தியன், சங்கவி, சாத்வீகன், சகானா (கனடா), சந்தியா (கனடா), சாதனா (கனடா), ஆதித்தன் (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), நந்தகுமார் (பொறியியலாளர் - லண்டன்), திலீபன் (மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்), கிருத்திகன் (Q.S) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(9114) தகவல் : குடும்பத்தினர்


## விற்பனைக்கு

கிழவிதோட்ட விக்கின விநாயக ஆலயத்தின் இரும்பினால் செய்யப்பட்ட கூரை 2X2 16 அடி நீளம் அத்தோடு 6 அடி, 8 அடி, 10 அடி பாவித்த அஸ்பெஸ்ரஸ் சீற்றுகள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :
0778754998
ஆலய செயலாளர் :
0776351279
(சி-9803)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(சி-9792)

## தொழில்வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரபல்யமான கம்பனிகளில் ஜேம்/கோடியல்/பால்மா/சவர்க்காரம்/Jewellery/ Ice- cream/யோகட்/ மற்றும் பல உற்பத்தி நிறுவனங்களில் நிரந்தர வேலைவாய்ப்பு ஆண், பெண் 17-55 வயது தமிழ், முஸ்லிம் விசேடம், சம்பளம் 18000/=, 32000/= தொழில் அடிப்படையில் சிங்களம் தெரியாத, தெரிந்த நண்பர், குழுவினர், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் தமிழில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு:- 077 8430 179
(சி-9791)

## யா/வயாவிளான் மத்திய கல்லூரி வயாவிளான்

### யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் 69ஆவது நிறுவுனர் தினம்

யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் 69ஆவது நிறுவுனர் தினம் எதிர்வரும் 2015.01.16ஆம் திகதி மு.ப 9 மணிக்கு கல்லூரியின் ஆ.சி.நடராஜா அரங்கில் கல்லூரியின் முதல்வர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்
(c-9801)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகுதியானவர்களே அமைச்சரவையில்
### சோபித தேரர் வலியுறுத்து

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அமைச்சரவையை நியமிக்கும் போது தகுதியானவர்களுக்கு தகுந்த இடத்தை வழங்க வேண்டும் என நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனை விடுத்து மோசடியாளர்கள் அல்லது நெருக்கத்தின் அடிப்படையில் பதவிகளை வழங்கினால் மக்களின் எதிர்பார்ப்பு மீண்டும் இல்லாமல் போய்விடும். பதவிகளை எதிர்பார்த்து பலர் அந்த பக்கத்தில் இருந்து இந்த பக்கத்திற்கு தாவி வருகின்றனர்.

ஹெரோயின் வியாபாரிகள், கசினோகாரர்கள் போன்றவர்களுக்கு பதவிகளை வழங்கக் கூடாது. கல்வி மற்றும் பாதுகாப்பு அமைச்

12 ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்தவின் ஆட்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணம்
## உரிமை கொண்டாடும் உறுமய

**(கொழும்பு) மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொணடு வந்ததும் நாங்கள்தான். அவரை ஆட்சியில் இருந்து விரட்டியதும் நாங்களே. நாம் சொன்னதை செய்து காட்டியுள்ளோம் என தெரிவிக்கும் ஜாதிக ஹெல உறுமய மூவின மக்களின் ஆதரவு எம்மை வெற்றியடையச் செய்துள்ளது எனவும் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலின் பொது எதிரணியின் வெற்றியினைத் தொடர்ந்து பொது எதிரணியின் பிரதான கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஓமல்பே சோபித தேரர்

இது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவிக்கையில், மாற்றத்தினை ஏற்படுத்தும் பிரதான பணியினை ஜாதிக ஹெல உறுமய செய்துள்ளது. அதேபோல் மாற்றத்தின் முதல் காரணகாரர்கள் சுயாதீனமாக செயற்பட்ட ஊடகவியலாளர்களே.

12 ஆம் பக்கம் பார்க்க...

## பேரா.சண்முகதாஸின் பவளவிழா கனடாவில்



கனடாவில் பெரிய சிவன் கோவிலல் எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பா ணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமாகிய பேராசிரியரான அ.சண்முகதாஸின் பவளவிழா இடம் பெறவுள்ளது. வண.பேராசிரியர் ஏ.ஜெ.வி. சந்திரகாந்தன் தலை மையில நடைபெறவுள்ள இவ்விழாவில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தமிழல் மொழிபெயர்த்த ஜப்பானியக் காதல் பாடல்கள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (இ-5)

## மக்களால் தண்டிக்கப்பட்ட மகிந்த இனி சட்டத்தால் தண்டிக்கப்படனும்

ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் பலர் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டதற்கு மக்களால் தண்டிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச சட்டத்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் எதிர் பார்த்தபடியே அமைந்திருக்கின்றன. ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்த சிங்கஎப் பேரினவாதம் மக்கள் சக்தியால் வீழ்த்தப்பட்டிருக்கின்றது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சுமார் 5 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அதைக் காட்டிலும் மன நிறைவளிக்கும் மற்றொரு விடயம் இத்தேர்தலின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்ந்தது தமிழர்கள் என்பது தான்.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த

12 ஆம் பக்கம் பார்க்க....

# இந்து ஆலயங்களில் இராணுவத் தலையீடு
## தடுத்து நிறுத்துமாறு இந்துமாமன்றம் புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை

இந்து ஆலயங்களில் இராணுவத் தலையீடு, புதைபொருள் ஆராய்ச்சியின் ஆதிக்கம் உடன் நிறுத்தப்பட வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் புதிய ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்து அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த நாட்டில் நல்லாட்சி நிறுவ தங்களால் வழிவகுக்கப்பட வேண்டும் எனப் பிரார்த்தித்து தங்களுக்கு இந்த நாட்டு இந்து அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நாட்டு இந்து மக்களின் சார்பில் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தாங்கள் பொறுப்பேற்றிருக்கும் இந்த நல் வேளையில் தங்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நாட்டில் சகல மக்களும் எந்தவித பாகுபாடுமின்றி சம உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதை தங்களின் ஆட்சி உறுதிப் படுத்தும் என்ற நம்பிக்கையுடன் தான் இந்நாட்டு மக்கள் தங்களுக்கு வாக்களித்து இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தங்களைத் தெரிவு செய்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையைப் பேணி தாங்கள் நிச்சயமாக செயற்படுவீர்கள் என்பது எமது அனைவரின்

12 ஆம் பக்கம் பார்க்க....

# வெற்றியில் முக்கிய பங்கு தமிழ்பேசும் மக்களுக்கே!
## ஒப்புக் கொள்கிறது சிங்கள தேசம்

(கொழும்பு)

பொது எதிரணியின் வெற்றியில் மறை முகமான பங்கு எமக்கு உள்ளது. எனினும் பொது எதிரணியில் உறவு வைத்துக் கொள்ளவோ வெற்றியில் பங்கு கேட்கவோ விரும்பவில்லை.நாம் சுயாதீனமாக செயற்பட ஆசைப்படுகின்றோம் என தெரிவிக்கும் ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெற்றியில் முக்கிய பங்கு தமிழ் பேசும் மக்களுக்கே உள்ளது. வெற்றியை தீர்மானித்த சக்தி அவர்களெனவும் தெரிவித்தார். தேர்தல் வெற்றி தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேனவின் பொது எதிரணியின் நேரடி பங்குதாரராக நாம் இருக்கவில்லை. எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியினை கவிழ்க்க எமது முழுமையான பங்கினையும் வழங்கினோம். இதை பொது எதிரணி பல மேடைகளில் சொல்லியுள்ளது.

12 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் தோல்வியால் மாரடைப்பில் ஒருவர் மரணம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வியை தாங்கிக்கொள்ள முடியாது ஒருவர் மாரடைப்பில் உயிரிழந்துள்ளார்.

களனி பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீன்பிடித் திணைக்களத்தின் இணை நிறுவனமொன்றின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த நபர் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் காலை உயிரிழந்துளளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த தேர்தலில் தோல்வியடைவதனை தொலைக்காட்சி தேர்தல் முடிவுகளின் மூலம் அறிந்து கொண்ட நபர் திடீரென நோய்வாய்ப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட

12 ஆம் பக்கம் பார்க்க....

# இராசி பலன்

11.01.2015
(மார்கழி 27, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.26 மணிக்கு
சஷ்டி முன்னிரவு - 9.54 மணிவரை
உத்தரம் முன்னிரவு -11.54 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
கெற்போட்ட முடிவு

வளவன்

**மேடம்:** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**இடபம்:** மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் பிரியப்படுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக் கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெற லாம், பணப் புழக்கம் அதி கமானாலும் அடுத்த [illegible] செலவுகளால் திணறுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு:** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** மருத்துவச் செலவுகள் கூடும் நாள், வேலைகள் உடனுக்கு டன் முடியாமல் தாமத மாக லாம், நல்லவர் என நினைத்த ஒரு வரே உங்களுக்கு விரோத மாக செயற்படலாம்.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், சொந்த பந்த ங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், போசன சுகமு ண்டு, காரியநன்மையுண்டு, உற் சாகமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் தோல்வி தமிழினத்தின் வெற்றி


## தமிழகத் தலைவர்கள் வரவேற்பு

**போர்க்குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததை வரவேற்றுள்ள தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் இது ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கும் கிடைத்த வெற்றியாகும் எனவும் தெரிவித்துள்ளனர்.**



**கருணாநிதி, தலைவர், தி.மு.க**

வெற்றி பெற்றவரும், தோல்வி அடைந்தவரும் கடந்த காலத்தில் நடைபெற்ற செயல்களுக்கு யார் பொறுப்பு என்பதை எண்ணிப் பார்த்து இனிமேலாவது திருத்திக் கொள்ள வேண்டும். போர்க் குற்றங்களுக்காக மகிந்த ராஜபக்ஷவை விசாரிக்க வேண்டும் என்பது தொடர்பாக நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியது அப்படியே இருக் கிறது என்றார்.



**விஜயகாந்த், தலைவர், தே.மு.தி.க.**

மகிந்த ராஜபக்ச தோல்வி அடைந் துள்ளார் என்ற செயதி ஒட்டுமொத்த தமிழ் இனத் துக்கு கிடைத்த வெற்றியா கும். இந்த உலகத்தில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், தண்டனை அடைந்து தான் ஆக வேண்டும். சிறி சேனா தலைமையிலான புதிய அரசு, அநீதி இழைக் கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை வழங்கி, தமிழ் மக்கள் வாழ் ந்த பகுதிகளிலேயே குடிய மர்த்தி அவர்களுடைய வாழ் வாதாரத்தை உயர்த்திட வேண் டும் என்று அவர் தெரிவித்தார்.




**டி.ராஜா, தேசிய செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

இந்த தேர்தலில் மைத்திரி பால சிறிசேன வெற்றி பெற்றார் என்பதை விட மகி ந்த ராஜ பக்ஷ தோற்கடிக் கப்பட்டுள்ளார் என்பதுதான் முக்கியம்.

ராஜபக்ஷ தோற்கடிக்க முடியாதவர் என்று உருவாக் கப்பட்ட பிம்ப உடைந்து விட்டது. ராஜபக்ஷவின் சர்வா திகாரப் போக்கை, குடும்ப அர சியலை மககள் நிராகரித்து விட்டனர்.

புதிய ஜனாதிபதி உறுதிய ளித்தபடி ஜனநாயகத்தை நிலைநாட்டுவாரா? என் பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண் டும். இதன் பிறகாவது தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய அரசு உரக்க குரல் கொடுக்க வேண்டும் என மேலும் வலி யுறுத்தினார்,



**ஜி.ராமகிருஷ்ணன், மாநில செயலாளர், மார்க்சிஸ்ட்**

இலங்கையில் நடை பெற்ற மனிதவுரிமை மீறல்கள் குறி த்த விசாரணை நடத்தப் படவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு சம அந்தஸது வழுங்கப்படவில்லை. இந்தப் பின்னணியில் நடைபெற்ற இலங் கைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப் பட்டு சிறிசேன வெற்றி பெற் றது வரவேற்கத்தக்கது.

இந்த வெற்றி தமிழர்களின் வாழ்க் கையில் எத்தகைய மாற் றத்தை ஏற்படுத்தும் என் பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இலங்கை தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் கூறியது போல, சிறிசேன உறுதிய ளித்தபடி, ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்தி நாடாளுமன்றத்தின் அதி காரத்தை கூடுதலாக்கினால், தமிழர்களின் பிரச்சினை களை பேசுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.



**ஜி.கே.வாசன், தலைவர், தமாகா**

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வின் தோல்வி ஒட்டு மொத்த தமழக மக்களின் உணர்வுக ளுக்கு கிடைத்த வெற்றி. தமி ழர்களின் நியாயமான எண் ணங்களை பிரதிபலி க்கும் வகையிலும், தமிழக மீன வர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையிலும் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்க இருக்கும் ஆட்சி யாளர்கள் அனைத்து நல்ல முயறசிகளையும் மேற்கொள்ள வேண்டும். சிங்கள மக்களுக குரிய உரிமைகள் அனைத் தும இலங்கை வாழ் தமிழர்களுக் கும் வழங்கப்பட வேண்டும்.



**கி.வீரமணி, தலைவர், திராவிடக் கழகம்.**

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷவை விட 5 சதவீத வாக்குகள் கூடுதலாகப் பெற் றுள்ளார். இந்த 5 சதவீத கூடுதல் வாக் குகள் தமிழர்களாலும், இஸ்லாமிய சகோ தரர்களாலும் தான் கிடைத்தது என்பதை மனதில் கொண்டு மைத்திரிபால சிறிசேன செயற்பட வேண்டும் எனக் கோரினார்.



**தமிழருவி மணியன், நிறுவனர், காந்திய மக்கள் கட்சி**

புதிதாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மைத் திரிபால சிறிசேன எந்தவகை யிலும் ஈழத் தமிழர்களுக்கு உரிய அரசியல் தீர்வை உருவாக்குவார் என்பதற் கான மிகச்சிறிய சமிஞ்கைகள் கூட இல்லை. எனவே, மகிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சி நமக்கு மகி ழ்ச்சியை தந்தாலும், மைத்திரிபால சிறி சேனவின் வெற்றி ஈழத் தமிழர்களுக்கு உரிய அரசி யல் தீர்வை உருவாக்கித் தருமா என்பதை காலம்தான் வெளிப் படுத்த வேண்டும்.



**தொல்.திருமாவளவன், தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி**

இனவெறியை வைத்து அரசியல் நடத்த முனையும் எல்லோருக்கும் இந்த தேர் தல் முடிவு ஒரு பாடமாகும். தற்போது மைத்திரிபால ஜனாதி பதியாக வெற்றி பெற்றிருப்பது தமிழ்மக்களுக்கு மகிழ்ச் சியை அளிக்கக்கூடியதோ நம்பிக்கை அளிக்கக்கூடி யதோ அல்ல. எனினும் முதற் கட்டமாக ஜனநாயக வழி யில் மகிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை வழங்கப்பட்டுள் ளது என்ற ஆறுதல் கிடைத் துள்ளது.



**தமிழிசை சவுந்தரராஜன், தமிழக பா.ஜ.க. தலைவர்**

யாராக இருந்தாலும் சட் டத்துக்குப் புறம்பாக கொடுங் கோல் ஆட்சி புரிந்தாலோ, ஓர் இனத்தை பழிவாங்கி னாலோ அவர்கள் நிச்சயம் தோல்வி அடைவார்கள் என் பதை வரலாறு மீண்டும் நிரூபித்திருக்கிறது எனத் தெரிவித்தார்.

மேலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார், இந் திய ஜனநாயகக் கட்சித் தலை வர் பாரி வேந்தர், மனிதநேய மக்கள் கட்சியின் எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா, தமிழக வாழ் வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் உள்ளிட்டோர் இலங்கைத் தேர்தலில் ராஜபக் ஷவுக்கு கிடைத்த தோல் வியை வரவேற் றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கு அரசு ஒத்துழைக்க வேண்டும்

## பழ.நெடுமாறன் மீண்டும் கோரிக்கை

**இலங்கைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அடைந்துள்ள தோல்வி வரவேற்கத்தக்கது. ஆனாலும், இது தமிழர்களுக்கு முழுமையான மகிழ்ச்சியளிப்பது ஆகாது. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை, மனித உரிமை மீறல், போர்க்குற்றம் ஆகியவற்றை விசாரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையம் அமைத்த விசாரணைக் குழுவை தனது நாட்டுக்குள் அனுமதித்து சுதந்திரமாக விசாரணை நடத்த புதிய ஜனாதிபதி துணை நிற்க வேண்டும். தமிழர் பகுதியிலிருந்து சிங்கள இராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என தமிழகத்திலுள்ள தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**

தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று இருப்பது குறித்து உலகத் தமிழர் பேரவை ஒருங்கிணைப்பாளரும், தமிழர் தேசிய முன்னணி தலைவருமான பழ.நெடுமாறன் கூறியதாவது,

இலங்கை தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சி மட்டுமே தமிழர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பது ஆகாது.

கடந்த காலத்தில் பதவிகளில் இருந்த சிங்கள தலைவர்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சிங்கள இனவெறியின் அடிப்படையில் தமிழர்களை ஒடுக்க வேண்டும் என்ற முறையில் ஆட்சி நடத்தினர்.

தமிழர்களை ஒடுக்குவதில் அவர்கள் போட்டி போட்டனர். வெற்றி பெற்று இருக்கிற மைத்திரிபால சிறிசேன இதற்கு விதி விலக்காக இருப்பார் என்பதை அவரது தேர்தல் கால பேச்சுக்கள் காட்டவில்லை.

இலங்கையில் மகிந்த காலத்தில் நடைபெற்ற போர் குற்றங்களையும் இனப்படுகொலைகளையும் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமை கமிஷன் அமைத்த ஆணையத்தை இலங்கைக்குள் அனுமதித்து சுதந்திரமாக விசாரணை நடத்த மைத்திரி அனுமதிக்க வேண்டும்.

தமிழர் பகுதியில் இருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். இந்த இரண்டையும் அவர் செய்தால் மட்டுமே தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் அவர் மீது நம்பிக்கை பிறக்கும். இதை அவர் செய்ய வேண்டும் என சர்வதேச அழுத்தம் தொடர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நால்வர் படுகொலை

பாரிஸில் ஷார்லி எப்தோ சஞ்சிகையின் மீது தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் இரண்டு ஆயுததாரிகளும் பிரான்சின் வடமத்திய பிராந்தியத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில், கிழக்கு பாரிஸிலும் வென்சென் பகுதியில் உள்ள யூத வர்த்தகத் தொகுதிக்குள் பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தினர்.

அந்தக் கடைக்குள் ஆயுததாரி ஒருவர் பலரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்து அவர்களைக் கொன்றுவிடப் போவதாக எச்சரித்திருந்தார்.

ஷார்லி எப்தோ சஞ்சிகை மீதான தாக்குதல் சந்தேகநபர்களான குவாச்சி சகோதரர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையை படையினர் கைவிட வேண்டும் என்று அந்த ஆயுததாரி கோரியிருந்தார்.

பின்னர், அந்த ஆயுததாரி கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தத் தாக்குதலில் பணயக்கைதிகள் நால்வரும் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்புத் துறைத் தகவல்கள் கூறுகின்றன.

படையினர் உள்ளே நுழைய முன்னதாக ஐந்து வெடிச் சத்தங்கள் கேட்டன. அதன் பின்னர, பணயக்கைதிகள்பலர்படையினரால்வெளியில் கொண்டு வரப்பட்டனர். (இ-5)

# பிரிட்டனில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 12 பேரை கொன்றனர். அதுபோன்று பிரிட்டனிலும் தாக்குதல் நடத்த அல்கொய்தா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

பிரிட்டனில் உளவுத்துறையான எம். 15 நிறுவனத்தின் தலைவர் ஆண்ட்ரூ பார்கஸ் இதை தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறும் போது, போக்குவரத்து வாகனங்கள், முக்கிய இடங்கள் மற்றும் பயணிகள் விமானத்தை கடத்தியும் தாக்குதல் நடத்தி பலரை கொன்று குவிக்க அல்கொய்தா தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

இத்திட்டத்தை இங்கிலாந்து தீவிரவாதிக்ள் துணையுடன் செயறபடுத்தவும் முடிவு செய்தனர். அவர்கள் சிரியா மற்றும் ஏமனில் தீவிரவாதி பயிற்சி பெற்று திரும்பியவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பிரிட்டன் விமான நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.(இ-5)

# சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து தச அவதாரம் எனும் தலைப்பில் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் ரி.ரி. சண்முகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ


## நிரந்தர தொழில்வாய்ப்பு

நம்பிக்கையோடு வாருங்கள். உங்களுக்கு வெற்றி நிச்சயம் உள்நாட்டில் பல வேலைவாய்ப்புக்களை இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 20,000/=, 26,000/=,45,000/=, (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகள் (ஜேம்/டொபி/கோடியல்/பிளாஸ்டிக்/பால்மா/....) தனியார் துறை முகம் விமானநிலையம், வாகன சாரதிகள், இலக்ரீசன் மற்றும் மேசன், கையுதவியாளர் உட்பட பல வேலைவாய்ப்புக்கள், வருகை தரும் நாளிலே வேலை நண்பர்கள், குழுக்கள், விரும்பத்தக்கது. உணவு+ தங்குமிடம் வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி 077 1116770
(சி-9794) முல்லைத்தீவு, வவுனியா 0776838531

## தேவை

கொழும்பை அண்மித்த பிரதேச ங்க ளிலுள்ள கட்டட நிர்மாணத்துறை களில் பல வெற்றிடம் மேசன்/ பெயி ன்டர்/ செடலின் பாஸ்/ இலறீசன் (1200/=, 1500/=) கையுதவியாளர் (1000/=1100/= தினமும் கைச் செலவு/ தங்குமிடமுண்டு.

தொடர்பு :- 077 788 9185 (சி-9791)

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-9738)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

## வகுப்புக்கள்

A/L இரசாயனவியல் வகுப்புக்கள் யாழ். பிரபல பாடசாலையின் பட்டதாரி ஆசிரியரினால் தனியாகவோ அல்லது குழுவாகவோ உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 7439 475,
(9084)

## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

◆220இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
◆3 வேலை நாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம் நெற்**

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இல. 18, பிரதானவீதி, நெல்லியடி.

ஏ9 வீதி, கிளிநொச்சி (கொமர்ஷல் வங்கி முன்பாக)

இல. 50, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)

கடற்கரை வீதி, குருநகர். (தொடர்மாடி கட்டடம் முன்பாக)

பிரதான வீதி,சங்கானை. (வைத்திலிங்கம் கட்டடம் மேல்மாடி, ஆசைபிள்ளை நகைக்கடை முன்பாக)

பிரதான வீதி, பருத்தித்துறை.

WESTERN UNION MONEY TRANSFER

271A. K.K.S. Road, Jaffna. T.P: 021 222 7835/ 077 7554528

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 65 1/2 செவ் 7இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/64 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: கனணி பொறியியளாளர்<br>தொ.இ: G/80 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 6 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC, CIMA/ கணக்காளர் (மாலைதீவு)<br>தொ.இ: B/68 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம் சதயம்<br>கி.பா: 27 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/86 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 22 3/4<br>தகைமை/தொழில்: CIMA/ கணக்காளர்<br>தொ.இ: B/69 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம் மூலம்<br>கி.பா: 33 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமைதொழில்:மருந்தாக்கவியளாளர் (கனடா)<br>தொ.இ: G/89 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம<br>கி.பா: 49 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSC அரச தொழில் (லண்டன் PR)<br>தொ.இ: B/72 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 36 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ HNDA/ தனியார்<br>தொழில்எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/95 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் வருகைக்கென விசேட பேருந்து சேவைகள்


(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசரின் மடுத் தேவாலயத்திற்கான வருகையை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள் நடத்தப்படவுள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான




விஜயத்தின்போது மடுத் தேவாலயத்திற்கு எதிர்வரும் 14 ஆம் திகதி வருகை தந்து ஆராதனை நிகழ்த்துவதால் அவ் ஆராதனையிலும் ஆசிர்வாத நிகழ்விலும் கலந்து கொள்ளும் பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி பயணிகளின் வருகைக்கேற்ப காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பேருந்து நிலையங்களில் இருந்தும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்தும் பேருந்து சேவை 13,14 ஆம் திகதிகளில் பயணிகளின் வருகைக்கேற்ப நடத்தப்படும் என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ



## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மேற்கு பருத்தித்துறை கலட்டி ஞானவைரவர் தேவஸ்தான திருவாசக முற்றோதல் இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து விசேட பூசை நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கல் இடம் பெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். (இ

## கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

அல்லாரை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி காசிப்பிள்ளை கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலக்கியம், சிறுகதை, கவிதை ஆகிய துறைகளில் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

கடந்த மாதம் 14 ஆம் திகதி சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் இவர் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (இ

## துன்னாலையில் வாள்வெட்டு சந்தேக நபர் கைதானார்

(கரணவாய்)

துன்னாலை சக்குசம்பா பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பிரஸ்தாப குடும்பஸ்தரின் வீட்டினுள் இரவு நேரம் நுழைந்து வாளால் வெட்டியதாக கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)

# காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்துங்கள்

(யாழ்ப்பாணம்)

**ஆனைக்கோட்டை கூழாவடியில் இராணுவத் தேவைக்கென ஐந்து தனியாரது குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்த உதவுமாறு குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இராணுவத்தின் 11 ஆவது சிங்க றெஜிமென் படையணிக்கென சுவீகரிக்கப்பட்ட 5 தனியாரது குடியிருப்புக் காணிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கையளிக்கப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் கடிதம் மூலம் குடியிருப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மரியாம்பிள்ளை சிங்கராசா, சுப்பிரமணியம் தம்பித்துரை, யேசுராசா விக்ரோறியா, இராயப்பு யேக்கப்பு, அம்பலவாணர்சிறி ஆகியோரது காணிகளே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளதாக கடந்த 7 ஆம் திகதி பிரதேசசெயலர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக காணி உரிமையாளர்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தமது காணிகளைக் கையகப்படுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறும் காணி கையகப்படுத்தல் தொடர்பாக தமக்கு கடிதம் அனுப்பப்பட்டதனால் தாம் மிகவும் விரக்தியடைந்துள்ளதாகவும் குடியிருப்பாளர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

குடியிருப்பாளர்கள் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள அந்தக் கடிதத்தில் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த குடியிருப்பு நிலத்தை யாருக்கும் வழங்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் அத்துமீறிய இந்த நடவடிக்கையை நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்புகள் ஆவன செய்ய வேண்டும்என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (இ

# குறும்படக் காட்சி

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் ஏழாவது நிகழ்வாக சிவலிங்கம் சிவராஜின் சமநிலை ஓணம் , ஹர்த்தால் ஆகிய குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

யுத்தத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தின் சமூக பண்பாட்டு நிலவரங்களையும் நாளாந்த தனிமனித இருப்பின் சிக்கல்களையும் விபரிக்கும் ஒன்றாக இவரது குறும்படங்கள் அமைகின்றன.

இவர் குறும்பட இயக்குநர், திரைக்கதை எழுதுநர், குறும்படத் தொகுப்பாளர் , ஒளிப்பதிவாளரும் ஆவார். காண்பியத்தொடர்பாடலில்சென்னை எஸ்.ஆர்.எம். கல்லூரியில் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது கலாசார உத்தியோகத்தராகக் கண்டாவளையில் பணி புரிகின்றார்.

மேற்படி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை 11 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சமகாலக்கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம் 199, கோவில் வீதி , நல்லூரில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து பயன் பெறுமாறு அழை க்கப் படுகின்றனர் என இலங்கை ஆவணக் காப்பக பொது முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார். (இ

# சம உரிமையுடன் கூடிய நல்லாட்சி மலர சைவமகாசபை ஜனாதிபதிக்கு வாழ்த்து

இலங்கையின் 7 ஆவது ஜனாதிபதியாக ஒரு தீர்க்கமான காலகட்டத்தில் பல சவால்களுக்கு முகங்கொடுத்து தெரிவு செய்யப்பட்டிருக்கும் தங்களை வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட இலங்கை வாழ் சைவத்தமிழர்கள் சார்பாக வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்எனவும்சமஉரிமையுடன்கூடிய நல்லாட்சி மலர பிரார்த்தி க்கிறோம் எனவும் சைவ மகாசபை பொதுச் செயலாளர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனையான சந்தர்ப்பத்தில் தாங்கள் இந்த வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்த பங்களித்த [illegible] கள் குழுமங்களில் ஒன்றாகிய வ[illegible]க்கு, கிழக்கு, மலையக சைவத் தமிழர்கள் சார்பாக சில விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் தங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

1.எவ்வித விசாரணையும் இன்றி நீண்டகாலம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களைவிடுதலை செய்து அவர்களின் குடும்பத்துடன் இணைந்து வாழவழிசெய்தல்.

2.பல தசாப்தங்களாக அகதி முகாம்களில் வாழும் மக்களை பூர்வீக இடங்களில் மீள்குடியேற அனுமதிப்பதோடு அவர்களுடைய சுதேச மத தலங்களில் வழிபாடு செய்ய வழிவகைகளை செய்து கொடுத்தல்.

3.[illegible] பிரதேசங்களில் வசித்து வரும் மலையக மக்களுக்கு உடனடியாக மாற்று இடங்களில் வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

இவற்றினை சீரிய முறையில் தங்கள் 100நாள் வேலைத்திட்டத்தில் நடைமுறைப்படுத்துவதனூடாக சிங்கள பௌத்தர்களுக்கும், சைவத் தமிழர்களுக்கும், இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் குழுமத்தினருக்கிடையில் நல்லுறவை கட்டியெழுப்பி இந்த நாட்டில் நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்தி எல்லோரும் சமஉரிமையுடன் பூர்வீக இடங்களில் வாழ வழிவகை செய்யுமாறு இறை சிவபெருமானைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களை தங்களுடைய நல்லாட்சிக்கு தெரிவித்து கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

## சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ்.புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் 64 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நிலையத் தலைவர் அ.சிவசுப்பிரமணியம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் எஸ். தவச்செல்வம் அறிவித்துள்ளார். (இ-10)


## சுவாமி விவேகானந்தரின் 153ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது ஜெயந்தி விழா நாளை திங்கட்கிழமை உரும்பிராயிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சி.திருவாகரன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

## வீதி புனரமைப்பு நிதி ஒதுக்கீடு



(முக்கொம்பன்)

கொடிகாமம் பிரதேச சபைக்குட்பட்ட தவசிகுளம் பூக்கிணற்றடி சந்தியிலிருந்து நாச்சிமார் கோவிலடி ஊடாக உசன் கந்தசாமி கோவிலடிக்கு செல்லும் வீதியின் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தவசிகுளம் நாச்சிமார் கோவில் பாலாவி உசன் பகுதி மக்கள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தும் பிரதான வீதி இதுவாகும்.

நீண்ட காலமாக செப்பனிப்படாது குன்றும் குழியுமாக இருக்கும் இவ் வீதியை போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் செப்பனிட்டு தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் ஆதரவு யாருக்கு?

**Hi bro**

அனு,வரணி.

நடந்து முடிந்த ஜனாதிபதித்தேர்தலில் உங்கள் ஆதரவு யாருக்கு?

நான் தமிழன்

**வியா மாமா!**

நிசாந்,தெல்லிப்பழை

என் அம்மா என்னை விளையாடாமல் படி படி என்று அடிக்கடி பேசுகிறார். நான் என்ன பண்ணுவது?

காலை எழுந்தவுடன் படிப்பு பின்னு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.

**வியா மாமா!**

கிருஷா,வரணி

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியின் வெற்றி குறித்து உங்கள் கருத்து?

இராவணனை அழிப்பதற்காய் இராமஅணை கட்டிட உதவிய அணில் போல் தமிழரை கொன்று குவித்த கொடிய ஆட்சியை தூக்கி எறிந்திட அணிலாய் என் வாக்கைப் பதிவு செய்தேன் என வலைத்தளப் பதிவு ஒன்றில் பார்த்த ஞாபகம்.

**Hai அண்ணா!**

கௌரீசன்,அல்வாய்.

தங்களை அழகுபடுத்துவதில் நேரத்தையும் பணத்தையும் செலவிடும் பெண்களைப் பற்றி என்ன சொல்லுறீங்க?

அதை ஆண்கள் விரும்புவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதை நினைத்து சில நேரம் சிரிப்பேன். பல நேரங்களில் அழுவேன்.



இதுதான் என் கடைசி தேர்தல் என்று சொல்லியும் மக்கள் என்னைத் தோற்கடிச்சிட்டாங்களே ஏன்?
உங்களைத் தோற்கடிக்கிறதுக்கு இதுதான் கடைசி வாய்ப்பென்று நினைச்சிருப்பாங்க தலைவரே!

**Hai அங்கிள்**

தாரு,

நான் ஒருத்தர உயிருக்கு உயிரா லவ் பண்ணுறன். அவர் என்ன பிரன்ஸ் என்று சொல்லுறார்.இதுக்கு என்ன செய்யலாம்?

எனது சிநேகிதன் வீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கே ஒரு சிறுவன் சோகமாக இருந்தான். ஏன் எனக் கேட்டடேன்? நீர் கேட்ட கேள்வியை அவன் என்னிடம் சொன்னான். சரி நீ காதலிக்கும் பெண் யார்? என்று கேட்டேன்? அனுஷ்கா என்றான்.நான் திகைத்துவிட்டேன்.சரி அனுஷ்கா எப்போ உன்னை பிரன்ஸ் என்று சொன்னார் என்றேன். நீங்கள் ஒரு ரியூப்லைட் அங்கிள். ரிவியில கெட் அன் சோல்டர் விளம்பரத்தில் ஹாய் பிரன்ஸ் என்கிறாங்களே என்றான் சோகமாக

**Hai மாமா!**

அனுசா,வரணி

நீங்க ஒரு பெண்ணோட போனத உங்க மனைவி பாத்திட்டா என்ன நடக்கும்?

கொஞ்ச நாளைக்கு எதுவுமே நடக்காது.

## தங்களை அழகு படுத்தும் பெண்களைப் பற்றி ...?

**Hi அங்கிள்!**

தர்சன் ,பொலிகண்டி

தல அஜித்தின் வீரம் படத்தின் வசூல் எவ்வளவு?

18.24 கோடி (இந்திய ரூபா 10 நாட்களில் மட்டும்)

**Mr மாமா**

குருபரந்தாமன், அல்வாய்

பெண்களின் மனதை எப்படி அறியலாம்? ஆழத்த அறியிறதா?

தம்பி அது நிலாவரைக்கிணறு மாதிரி. எவ்வளவு சங்கிலிய விட்டாலும் சும்மா போயிட்டே இருக்கும். தேசிக்காய இங்க போட்டா கீரிமலைக்கடலில் மிதக்கும் என்கிற கதையும் இருக்குதுங்க.

**Hai அண்ணா!**

தனாதீபன்,விசுவமடு

ஒரு பொண்ணுகிட்ட எப்படி லவ் சொல்லுறது. உங்க அனுபவத்தில் சொல்லுங்க?

சிவ சிவா !

ஏன்டா அம்பி நான் என் ஆத்துக்காரியோட ஒண்ணா இருக்கிறது நோக்குப் பிடிக்கலயாடா? இப்படிப்படுத்திறியே!

**Hai மாம்ஸ்**

சந்தோஸ்

ஒரு பொண்ணு இரவில் மட்டும் எஸ்எம்எஸ் அனுப்புறாள். இதற்கு காரணம் என்ன?

உன் வாழ்வு இருளாகப் போகின்றது என்பதுதான் அதன் அர்த்தம்

# ஊவா மாகாண முதலமைச்சராக ஹரீன் பெர்னாண்டோ பதவியேற்பு



ஊவா மாகாண முதலமைச்சராக மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ நாளை மறுதினம் 13 ஆம் திகதி முற்பகல் பதவியேற்கவுள்ளார்.

ஊவா மாகாண சபையின் புதிய அமர்வு நாளை மறுதினம 13 ஆம் திகதி சபைத் தலைவர் ஏ.எம். புத்ததாச தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பதுளையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோவிற்கு ஊவா மாகாண முதலமைச்சர் பதவியை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

ஊவா மாகாண சபையின் ஆளும் கட்சி தரப்பிலிருந்து நான்கு உறுப்பினர்கள்சபையின்புதிய அமர்வின் போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர். இவ் இணைவுடன் தமக்கு பெரும்பான்மைபலத்தைஊவாமாகாணஆளுநரிடம் உறுதிப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ மாகாண முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார். (இ-5)

# அமைச்சரவையில் பங்கேற்பது குறித்து நாம் இதுவரையில் தீர்மானிக்கவில்லை

## மு.கா.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை பெறுவதா? இல்லையா? என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும். மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குவது எமது கடமை.

எமது கட்சியின் தலைவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயார்.

முஸலிம் காங்கிரஸ் இன ,மத, பேதமின்றி செயற்படும். எனினும் நாங்கள் அமைச்சர் பதவியை ஏற்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் ரஜாப்தீன் தெரிவித்தார். (இ-5)

# ஐ.ம.சு.கூ. ஆதரவாளரின் வீட்டின் மீது சூடு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

நிக்கவரெட்டிய திவுல்வெவ பிரதேசத்திலேயே நேற்று சனிக்கிழமை அதிகாலை இந்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நிக்கரவெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# முன்னாள் ஜனாதிபதியினது சகோதரரும் பயணமானார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரரான டட்லி ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை அதிகாலை பாங்கொக் பயணமானார்.

அமெரிக்க பிரஜையான அவர், ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் நாட்டுக்கு வந்தார். அதன் பின்னர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்திலுள்ள அதிசொகுசு அறையில் நான்கு நாட்கள் தங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


டி.ஜி.308 என்ற விமானத்திலேயே நேற்று அதிகாலை 1.30இற்கு நாட்டைவிட்டு புறப்பட்டு சென்றுவிட்டதாக தெரிவிக்கப் படுகின்றது .இதேவேளை முன்னாள் ஜனாதிபதியின் ஆதாரவாளர்களும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ படத்தின் தடை வழக்கில் புதிய திருப்பம்?

ஐ படத்தை இந்த பொங்கலுக்கு எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்று லட்சக்கணக்கான ரசிகர்கள் வெயிட்டிங். இந்நிலையில் நேற்று இப்படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கர் ரவிச்சந்திரன் பிக்சர் ஹவுஸ் மீடியா நிறுவனத்திடம் கடன் வாங்கி திருப்பி தரவில்லை, அதனால் படத்தை வெளியிட 3 வாரங்கள் தடை விதிக்கிறோம் என்று நீதிமன்றம் கூறியது. -

பின் இது குறித்து ரவிச்சந்திரன் ' நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள், எங்களுக்குள் எந்த பிரச்சனை இருந்தாலும் விரைவில் தீர்க்கப்படும். மேலும், படம் சொன்ன தேதியில் வெளிவரும்' என தெரிவித்ததாக கூறப்படுகிறது.




## தடையை உடைத்த ஐ

இயக்குனர் ஷங்கரின் பிரம்மாண்ட படைப்பான ஐ ஜனவரி 14ம் தேதி ரிலீஸ் ஆவதாக இருந்தது. அதனை தடை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

பிக்சர் ஹவுஸ் மீடியா என்ற பி.வி.பி நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை ஆஸ்கர் ஃபிலிம்ஸ் தயாரிப்பாளர் ரவிச்சந்திரன் கொடுக்கவில்லை. இதனால், அரசு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, ஐ படத்தை மூன்று வாரங்களுக்கு வெளியிட இடைக்காலத் தடை விதித்தார். ஜனவரி 30க்குள் ஆஸ்கர் ரவிச்சந்திரன் பதில் அளிக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார்.

இந்த நிலையில், தயாரிப்பாளர் ஆஸ்கர் ரவிச்சந்திரன் பி.வி.பி நிறுவனத்தைச் சார்ந்த அரசுக்கு தர வேண்டிய 17 கோடி கடனை கொடுத்துவிட்டதால், அரசு தனது வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டார். இதையடுத்து சொன்னபடி வருகிற ஜனவரி 14 ம் தேதி ஐ படம் வெளியாக உள்ளது.



# அந்த மாதிரி நடிங்க ! கோபத்தில் ஸ்ரீதேவி!

ஸ்ரீதேவி நீண்ட இடைவேளைக்கு பிறகு விஜய் நடித்து வரும் புலி படத்தில் நடித்து வருகிறார். மீண்டும் இவர் தான் நடிக்க வந்துட்டாரே? பிறகு என்ன என்று பிரபல தெலுங்கு இயக்குனர் ஒருவர் இவரை அனுகியுள்ளார். அவர் படத்தின் கதை முழுவதையும் கூற, பொறுமையாக கேட்ட ஸ்ரீதேவி, இதில் நான் என்ன வேடம் என்று கேட்டுள்ளார். அதற்கு அவர் மெதுவாக விலைமாது என்று கூற, உடனே செம்மரைடு விட்டு அனுப்பினாராம் ஸ்ரீதேவி.

ஆனால், இது நாள் வரை அந்த இயக்குனர் யார் என்று மட்டும் தெரியவில்லை.

# இனி அஜித்துடன் செல்லமாட்டேன்! பயத்தில் அருண் விஜய்



அஜித் நடிப்பில் விரைவில் திரைக்கு வரவிருக்கும் படம் என்னை அறிந்தால். இப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் அருண் விஜய் நடித்துள்ளார்.

இப்படத்தின் ட்ரைலர் சமீபத்தில் வெளிவந்து அனைவரையும் கவர்ந்து வருகிறது. இந்நிலையில் அருண் விஜய் தன் டுவிட்டர் பக்கத்தில் ஒரு கலகலப்பான கமெண்டை டுவிட் செய்துள்ளார். இதில் 'எப்போதும் அஜீத் கார் ஓட்டும் போது அவர் பின்னால் உட்காரக் கூடாது என்று பாடம் கற்றுக் கொண்டேன்.

அஜீத் மிகச்சிறப்பாக 360 டிகிரி டிரிஃப்டிங் செய்தார்' என டுவிட் செய்திருந்தார்.

## புலி தலைப்பை மாற்றப் போகிறார்களா?




விஜய் தற்போது சிம்புதேவன் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்திற்கு சில நாட்களுக்கு முன் தான் புலி என்று தலைப்பு வைத்தனர்.

ஏற்கனவே விஜய் படத்திற்கு பிரச்சனைகள் வரிசை கட்டி நிற்கும். அந்த வகையில் இந்த முறை பிரச்சினை டைட்டிலேயே ஆரம்பித்தாலும் ஆச்சரியம் இல்லை.

ஏனெனில் புலி என்ற இந்த ஒரு சொல்லே போதும், இந்நிலையில் படக்குழுவினர் பலரும் இதுப்பற்றி விஜய்யிடம் தெரிவிக்க அவரும் யோசிக்க ஆரம்பித்து விட்டாராம்.

மேலும், இப்படம் குழந்தைகளை கவரும் வகையில் தான் எடுக்கப்பட்டு வருகிறதாம். அதனால் அனைவரையும் கவரும் வகையில் வேறு ஏதாவது டைட்டில் வைக்கலாம் என படக்குழு முடிவு எடுத்திருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சீனா வரை சென்றது விஜய்யின் மாஸ்!

விஜய்யின் மாஸ் தமிழகம் மட்டுமின்றி தென்னிந்தியா முழுவதும் ஆக்ரமித்துள்ளது.

அந்த வகையில் சில மாதங்களுக்கு முன் வெளிவந்த கத்தி திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது.

இப்படத்தில் இடம்பெற்ற செல்பி புள்ள பாடல் பட்டி தொட்டியெல்லாம் பட்டையை கிளப்பியது. இந்த பாடலை சீனா நாட்டை சேர்ந்த ஒருவர் பாடி அசத்தியுள்ளார்.









கொல்லின் சோப்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை மறந்த ஜனாதிபதி மைத்திரி

## மனோ கணேசன் காட்டம்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் தமிழர்களின் ஆதரவைக் கோரிப்பெறுவது, தேர்தல் முடிந்ததும் தமிழர்களை உதாசீனம் செய்து உதறித் தள்ளுவது இதுதான் தென்னிலங்கை அரசுகளின் காலாகால பரவணிப்பழக்கம்.

அதை இன்று ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடனேயே செயலில் காட்டத் தொடங்கி விட்டீர்களே!" என்று புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீது சீறிப்பாய்ந்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர் ஆகியோர் பதவியேற்கும் நிகழ்வு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அந்த நிகழ்வை ஒட்டி இடம்பெற்ற உரையாடல் ஒன்றின் போதே புதிய பிரதமர் மீது இப்படிப் பாய்ந்து விழுந்தார் மனோ கணேசன். பதவியேற்ற பின்னர் உரையாற்றிய புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது வெற்றிக்கு உழைத்தவர்களைப் பெயர் குறிப்பிடுபட்டியலிட்டு நன்றி பாராட்டினார். ஆனால் தமிழக் கட்சிகளின் தலைவர்களான சம்பந்தர், மனோ கணேசன், திகாம்பரம் போன்றவர்களின் பெயர்களையோ, கட்சிகளையோ குறிப்பிட்டு நன்றி கூறாமல், வேண்டுமென்றே தவிர்ப்பவர் போல, தமது உரையை அவர் முடித்துக் கொண்டார்.

இதனால் சீற்றமடைந்த மனோ கணேசன் தனது கோபத்தை புதிய பிரதமரிடம் கொட்டித் தீர்த்தார். ரணில் விக்ரமசிங்க, சரத் பொன்சேகா, சந்திரிகா குமாரதுங்க, சம்பிக்க ரணவக்க, ஹக்கீம், றிசாத் பதியுதீன் போன்றவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்ட புதிய ஜனாதிபதிக்கு ஏனோ சம்பந்தன், மனோ கணேசன், திகாம்பரம் போன்றோரின் பெயர்கள் மட்டும் தெரியவில்லை அல்லது நினைவுக்கு வரவில்லை.

இவர்களில் சில தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க ஆரம்பத்தில் முன்வரவில்லை. மக்கள் ஏற்கனவே மைத்திரிபாலவை ஆதரிக்க முன் வந்து விட்டமையால் வேறு வழியின்றி தமது ஆதரவை வழங்க அவர்கள் முன்வந்தார்கள்.



அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறத் தெரிந்த புதிய ஜனாதிபதியின் கணிப்பில் தமிழர் தலைவர்கள் மட்டும் தட்டுப்படாமல் போய்விட்டார்கள் எனவும காட்ட மாகத் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தலில் தோற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தம்மை வரவேற்ற அம்பாந்தோட்டை, மெதமுலன மக்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது, நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்கள் தமக்கு வாக்களித்தனர் என்று அங்கு கூறிய அவர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களே தமக்கு வாக்களிக்காமல் விட்டு தோற்கடித்துள்ளனர் என்ற சார்பட உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாற்றத்தை விரும்பி மக்கள் வாக்களித்தனர் இதனை ஜனாதிபதி மைத்திரி மறக்கக்கூடாது

(கொழும்பு)

வடக்கு தமிழ் மக்களின் அமோக ஆதரவை பெற்று வெற்றியைத் தமதாக்கி புதிய யுகம் படைக்க காத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்கள் மீது இது வரை கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்கள், அட்டூழியங்கள் ஒழிந்து அவர்கள் வாழ்வில் சாந்தியும், சமாதானமும் மலர அவர்களுடைய அபிலாசைகள் நிறைவேற நிரந்தர




அரசியல் தீர்வை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தங்களை மனமார வாழ்த்துகின்றோம் எனமக்கள் சக்தி அமைப்பின் தலைவர் மு.குமாரவேல் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 160-180 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 70-75 | 80 |
| பச்சைமிளகாய் | 550 | 400-450 | 500 |
| தக்காளி | 150 | - | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 45-50 | 50 |
| கோவா | 140 | 80-110 | 140 |
| கரட் | 200 | 150 | 200 |
| பூசணி | 40 | 35-40 | 50 |
| புடோல் | 150 | 90-100 | 140 |
| வாழைக்காய் | 100 | 70-80 | 100 |
| சின்ன வெங்காயம் | 110 | 50-90 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 85 | 100 |
| பாகற்காய் | 350 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 130-140 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 280 | 180-250 | 200 |
| லீக்ஸ் | 350 | 200 | 400 |
| பீற்றூட் | 220 | - | 240 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 350 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 25 | 15 | 50 |
| தேசிக்காய் | 100 | 45-50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45-50 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை.. 249

டொறின் மன்மதநாயகம்





குபேரன் சத்தியரூபன்





சிந்து சிந்துஜா





டொறின் மன்மதநாயகம்




சுதர்சன் யோகலிங்கம்




கஜானன் சுந்தரலிங்கம்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யார் செய்த குற்றம்?



செல்வரான தர்மராஜனின் மூன்றாவது மகனான முரளி, சிறு வயதிலிருந்தே படிக்காமல் ஊரைச சுற்றித் திரிந்தான்.

தவறான நண்பர்களின் சேர்க்கையால் பள்ளியிலிருந்து விலகி எப்போதும் நேரத்தை வீணாகக் கழித்தான்.

பணத்தைத் தண்ணீராக வாரியிறைத்துச் செலவு செய்தான்.

அவன் பத்தாயிரம் ரூபாய்க்கும்மேலாகக்கடன வாங்கி இருந்ததால் கடன் கொடுததவர்கள் பணத்தைத் திருப்பித் தருமாறு நச்சரித்தனர். ஆனால் முரளியிடமிருந்து சல்லிக்காசு கூட பெயரவில்லை.

ஒருநாள் கடன் கொடுத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தர்மராஜனின் வீட்டிற்கே வந்து, அவரிடம் பணம் கேட்டனர்.

முரளியின் அண்ணன்மார்கள் தங்கள் தம்பியின் நடத்தையால் அவமானமும் கோபமும் அடைந்து, கடன்காரர்களிடம் "இன்றுமுதல், இவனுக்கும எங்களுக்கும் சம்பந்தமிலலை. அவனிடம் கடனை வசூலிப்பது உங்கள் சாமர்த்தியம்!" என்று கூறி விட்டனர். "அப்படியா? உங்கள் தம்பி இன்னும் இரண்டு நாட்களுக்குள் கடனைத் திருப்பித் தராவிட்டால் அவனைப் பஞ்சாயத்தில் ஒப்படைதது சிறையில் அடைக்கச் செய்வோம்!" என்று எச்சரித்து விட்டுச் சென்றனர்.

விஷயம் இந்த அளவிற்கு விபரீதமாகும் என்று எதிர்பாராத முரளி தன் தந்தையிடமும், சகோதரர்களிடமும், "இந்த முறை மட்டும் பணம் கொடுத்து எனக்கு உதவுங்கள். இனி, நான் கடன் வாங்க மாட்டேன்.

உழைத்துப் பிழைப்பேன்!" என்று கெஞ்சி னான். ஆனால் அவன் தந்தை தர்மராஜன்கூட மனம் இளகவிலலை. "நீ வீட்டை விட்டு வெளியேறு! உழைத்து சம்பாதித்து கடனைத் தீர்!" என்று சொல்லி விட்டார்.

மனமுடைந்த முரளி தனது நண்பன் கேசவனைத் தேடிச் சென்றான். அவனிடம் பண உதவி கேட்டுக் கெஞ்சியபோது, கேசவன், "முரளி! இப்போது என்னிடம் பணம் இல்லை. ஆனால் பணம் சம்பாதிக்க ஒரு சுலபமான வழி சொல்லித் தருகிறேன்.

இந்த ஊரிலேயே பெரிய நகை வியாபாரி ராமநாதனின் வீட்டிற்கு இன்று இரவு சென்று கொள்ளையடிப்போம். கிடைக்கும் பணத்தில், உன் கடனை அடைத்து விடலாம்" என்றான்.

அவன் யோசனையைக் கேட்டு திடுக்கிட்ட முரளி, "போது மப்பா! நான இதுநாள் வரை தவறான வழிகளில் ஈடுபட்டிருந்தேன். இனி உழைத்து சம்பாதிப்பது என்ற முடிவிற்கு வந்து விட்டேன்" என்றான்.

அதைக் கேட்டு சிரித்த கேசவன், "நாள் முழுதும் உழைத்தாலும் உனக்கு ஐம்பது ரூபாய்கூட கிடைக்காது. அதை வைத்து நீ எந்தக் காலத்தில் கடன் அடைப்பாய்? பேசாமல் நான் சொல்வதைக் கேள்! இன்றிரவு, அம்மன் கோயிலில் தங்கு! அர்ச்சகர் தரும் பிரசாதத்தை சாப்பிடு! பிறகு, அவர் உபந்நியாசம் நிகழ்த்துவார்.

அதைக் கேட்டுக் கொண்டிரு. நான் உன்னை அங்கு சந்தித்து, அழைத்துப் போகிறேன். பிறகு இருவருமாகத் திருடப் போகலாம்!" என்றான். "சரிதான்! அகப்படடுக் கொண்டால் என்ன ஆகும்?" என்று முரளி கேட்டான்.

"சிறைவாசம் கிடைக்கும்! நீ இன்னும் இரண்டு நாட்களில் கடனை அடைக்காவிட்டாலும் சிறைக்குச் செல்ல நேரிடும்.

அதை நாளையில் இருந்தே நீ அனுபவிக்கப் போகிறாய். தவிர, திருடினால் அகப்பட்டுக் கொள்வோம் என்று ஏன் நினைக்கிறாய்? நான் இதுவரை நான்கு முறை திருடியிருக்கிறேன். ஒரு முறையும் சிக்கிக்கொளளவிலலை. பயப்படாமல் வா!" என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

முரளிக்கு கேசவனின் யோசனை சிறிதும் கூடப்பிடிக்கவில்லை. ஆனால் வேறு வழியின்றி அம்மன் கோயிலல் தங்கி னான். இரவில், அர்ச்சகர் தந்த பிரசாதத்தைத்தின்று பசியாறினான். பிறகு, அர்ச்சகர் ஜெகன் னாத சாஸ்திரி உபந்நியாசம் செய்யத் தொடங்கினார். அன்று அவர் கிருஷ்ணரின் கீதையிலிருந்து சில பகுதிகளை பொருள் பட



உபதேசம் செய்தார். நமக்குள் உறை யும் கடவுள் தான் நம்மை இயக்குகிறார் என்றார். அதைக் கேட்டதும் முரளிக்குத் தெளிவு பிறந்தது.

மேற்கொண்டு அவருடைய விளக்கத்தைக் கேட்காமல், 'ஆகா... எல்லாம் இறைவன் செயலே. எனது நண்பன் என்னைத் திருடச்சொன்னதும் இறைவன் செயல் தான்! ஆகவே, திருடுவதில் தவறில்லை' என நினைத்தான்.

(தொடரும்)

## 01.2015 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1055 - தியோடோரா பைசண்டைன் பேரரசியாக முடிசூடினாள்.
- 1569 - முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.
- 1693 - சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.
- 1779 - மணிப்பூரின் மன்னராக சிங்-தாங் கோம்பா முடிசூடினார்.
- 1787 - யுரேனஸ் கோளின் இரண்டு துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1805 - மிச்சிகன் பிரதேசம் அமைக்கப்பட்டது.

1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவிலிருந்து விலகியது.

- 1879 - ஆங்கிலோ-சூளு போர் ஆரம்பமானது.
- 1878 - பால் முதற்தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1922 - நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம் பூரைக் கைப்பற்றியது.
- 1943 - ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.
- 1946 - என்வர் ஹோக்ஸா அல்பேனியாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்து அதனைக் குடியரசாக்கினார்.
- 1957 - ஆபிரிக்க உடன்பாடு டக்கார் நகரில் எட்டப்பட்டது.
- 1972 - கிழக்கு பாகிஸ்தான் வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 2007 - செயற்கைக் கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

### பிறப்புகள்

- 1755 ஸ்ரீ அலெக்சாண்டர் ஆமில்டன், அமெரிக்க மெய்யியலாளர் (இ. 1804)
- 1786 - ஜோசப் ஜாக்சன் லிஸ்டர், ஆங்கிலேய இயற்பியலாளர் (இ. 1869)
- 1953 - ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே, இலங்கையை அரசியல்வாதி (இ. 2008)
- 1973 - ராகுல் திராவிட், இந்தியத் துடுப்பாட்டக்காரர்

### இறப்புகள்

- 1753 - ஹேன்ஸ் ஸ்லோன், ஐரிய மருத்துவர் (பி. 1660)
- 1976 - ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்
- 2000 - பெட்டி ஆர்க்டேல், ஆங்கிலேய-ஆத்திரேலியத் துடுப்பாளர் (பி. 1907)
- 2008 - எட்மண்ட் இல்லரி, நியூசிலாந்து மலையேறுநர் (பி. 1919)
- 2013 - ஏரன் சுவோற்சு, அமெரிக்கக் கணினியாளர் (பி. 1986)
- 2014 - ஏரியல் சரோன், இசுரேலின் 11ஆவது பிரதமர் (பி. 1928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

... அவனிடமிருந்து தப்பி ஓடும்போது நீர்விழ்ச்சியில் இருந்து விழுந்து இறந்து போகிறார் பத்மபிரியா.

அதன் ஆவியாக அலைந்துகொண்டிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு பின் விஜயகுமாருக்கும் லதாவுக்கும் திருமணம் நடைபெற்றது.

ஒரு சமயம் லதா தனியாக இருக்கும்போது அவர் உடலுக்குள் பத்மபிரியாவின் ஆவி புகுந்துகொள்கிறது. லதா ஆவியாக திரிகிறார்.

விஜயகுமாரும் பத்மபிரியாவின் ஆவி புகுந்துள்ள லதாவும் தாம்பத்ய உறவு கொண்டால் அந்த ஆவி நிரந்தரமாக லதா உடலிலேயே தங்கி விடும்.

ரஜினி இதைத் தெரிந்து கொள்கிறார். லதாவின் உடலிலிருந்து பத்மபிரியாவின் ஆவியை வெளியேற்றி மீண்டும் லதாவின் ஆவியை அதன் உடலுக்குள் புகச் செய்ய அவர் மேற்கொள்ளும் முயற்சிகளை வைத்து கதை புதுமையாகவும் விறுவிறுப்பாகவும் பின்னப்பட்டு இருந்தது.

10-03-1978 அன்று வெளியான இந்தப் படம் நூறு நாள் ஓடியது.

மாறுபட்ட வேடத்தில் ரஜினி சிறப்பாக நடித்திருந்தார்.

படத்தில் இடம்பெற்ற வெண்மேகமே என்ற பாடல் மிகப் பிரபலம்.

### டைரக்டர் துரை அனுபவம்

ரஜினி நடித்த ரகுபதி ராகவன் ராஜாராம், ஆயிரம் ஜென்மங்கள், சதுரங்கம் ஆகிய மூன்று படங்களை டைரக்ட் செய்தவர் துரை.

ரஜினியுடன் பழகியபோது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி துரை கூறியதாவது-

என் இயக்கத்தில் ரஜினி நடித்த முதல் படம் ரகுபதி ராகவன் ராஜாராம் அண்ணன் தம்பிகள் மூவரையும் சுற்றிப் பின்னப்பட்ட கதை. கதாநாயகியின் முறை மாப்பிளையான வீரய்யன் கதாபாத்திரத்தில் ரஜினி நடித்தார்.

எஸ்டேட்டில் சைக்கில் கடை வைத்திருந்த வீரய்யன் யார் வம்புக்கும் போக மாட்டான் வந்த வம்பையும் விடமாட்டான்.

முறைப்பெண்ணை காதலிக்கும் வீரய்யன் அவள் வேறு ஒருவனை காதலிக்கிறாள் என்பதை அறிந்து ஒதுங்கிக் கொள்வான்.

இந்த நிலையில் முறைப் பெண்ணை ஒருவன் கெடுத்து விட்டான் என்பதை அறியும் போது துடித்துப் போவான்.

உன்னைக் கெடுத்தவனை உயிருடனோ அல்லது பிணமாகவோ உன் காலடியில் போடும் வரை ஓயமாட்டேன் என்று சபதம் செய்துவிட்டு வெளியேறுவான். சொன்னது போலவே வில்லனை கொன்று பிணத்தை முறைப் பெண் முன் கொண்டு வந்து போட்டு விட்டு போலீசில் சரணடைவான்.

22




ஆயிரம் ஜென்மங்கள் படத்தில் லதா, விஜயகுமார், ரஜினி

### புதுமையான வேடத்தில் நடித்த "ஆயிரம் ஜென்மங்கள்"

### ஆழியார் அணையில்

ஆயிரம் ஜென்மங்கள் படப்பிடிப்பு ஆழியார் அணைப் பகுதியில் நடந்தது. அங்கு மூன்று அறைகள்தான் இருந்தன. ஒரு அறை கதாநாயகி லதாவுக்கு. இன்னொரு அறையில் விஜயகுமார் தங்கினார். மூன்றாவது அறையில் டைரக்டரான எனக்கும் ரஜினிக்கும் ஒதுக்கப்பட்டது. அந்த அறையில் ஒரு கட்டில் தான். மற்றொருவருக்காக தரையில் பெட் விரிக்கப் பட்டிருந்தது. நீங்கள் கட்டிலில் படுத்துக்கொள்ளுங்கள். நான் தரையில் உள்ள படுக்கையில் படுத்துக்கொள்கிறேன் என்று கூறினேன். அதை ரஜினி ஏற்கவில்லை. நீங்க கட்டிலில் படுங்க. நான் கீழே படுத்துக்கிறேன் என்று கூறி அப்படியே படுத்துக் கொண்டார். அவருடைய பெருந்தன்மை என்னை நெகிழச்செய்துவிட்டது.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- ५५

....அவ நெனைச்சதையே ஊர் பெருசுகளும் சொல்லவும் இன்னொரு கும்புடும் சேத்துப் போட்டு எந்திரிச் சுட்டா பெரியமூக்கி.

தள்ளிப் போடப்படாது நாளைக்கே கலைச்சிரணும் கருவாச்சி கருவ.

பாவம் கத்தாழங் காட்டுக்குள்ள பூத்த ஆவாரம்பூவு கருவாச்சி. நாக்குல போட்டாக் கரைஞ்சு போற பஞ்சு முட்டாய் மாதிரி லேசான மனசு.

ரொம்ப நாளைக்கு முன்ன ஒரு சம்பவம்.

அழுக்குத் துணிகள அள்ளி கொடம் நிறைய திணிச்சுக்கிட்டுக் கொளத்துக்குத் தொவைக்கப் போனா விடிய்ய. கரையில போயி நின்னவ நின்னவதான்.

ஒரு துணியும் தொவைக்காம வெயிலேற வீடு வந்துட்டா. கேட்டாச் சொல்றா; தன்னை மறந்து தண்ணி ஒறங்குது எப்படி எழுப்ப?

ஒருநாள்.. கழுத்துக் கடுக்கச் சோளம் சொமந்து போய்க்கிட்டேயிருந்தவ கத்தாழம் பொதரக் கண்டதும் நின்டதும் நிக்க நின்னுட்டா.

மயிலு தோகை விரிச்சாச் சுருட்டி வச்சிருமா இல்லையா; எங்க கத்தாழையுந்தான் தோகை விரிச்சுருக்கு. விரிச்ச பெறகு என்னைக்காச்சும் சுருட்டி வச்சிருக்கா?

விட்டாக் கத்தாழையக் கல்யாணமே நாளா அவ இருதயக் கூட்ல கட்டி வச்சிருக்கிற ஆசைக ரெண்டு இருக்கு.

மீன் குஞ்சு பொரிஞ்சு வெளியேர்றதப் பாத்திரணும்; பாம்பு சட்டை உரிக்கிறதப் பாத்திரனும்.



பண்ணிக்கிருவா போலிருக்கேன்னு சிரிச்சு விழுந்து போனாக கூடப் போன ஆளுக.

பசுமாடு கண்டு போடுறதப் பாத்திருக்கா. ஆடு குட்டிப்போடுறதப் பாத்திருக்கா. கோழி முட்டை பொடுறதக் கூடப் பாத்திருக்கா. ஆனா ஒரு [illegible]

ஆனா இந்தக் கேடுகட்ட காலத்துக்கு ஆச கருவாச்சி கரு கலஞ்சு வர்றதப் பாத்திரணும்.

வைத்தியச்சி ரங்கம்மா பெரிய்ய கெட்டியக்காரி. நாயக்கமாரு பொம்பள தாட்டியமானவ. வேறு காலம் பாக்கிறதில்ல [illegible] சுத்திக்கு மருந்து கட்டுறது வரைக்கும் அவள அடிக்க ஆளு இல்ல எட்டூர்ல. வைத்தியமும் பாப்பா களை கணிக்கும் போவா. யாரு கூப்பிட்டாலும் ஊர் ஊருக்குப் போயி ஒப்புச் சொல்லி அழுது அழுத காசுக்கு அரிசி பருப்பு வாங்கிட்டு வீடு வந்திருவா.

குருவி மாதிரி ஒரே கூட்லயிருந்தாப் பொழப்பு நடக்காது. பாம்பு மாதிரி பல பொந்துகள்லயும் குடியிருந்து பழகணும்னு தத்துவம் வேற வச்சிருக்கா.

மனுசனுக்கு மண்ட பூரா வலிச்சாப் பொறுத்துக்கிரலாம். ஒரு பக்கமா வலிக்கும் பாருங்க ஒத்தத் தலவலி.. உசுரு போயி உசுருவரும். வட்டிக்குச் சொத்தெழுதி வாங்குனவனுக்குக் கூட வரப்படாது அது.

விடிய்ய மண்டையில குத்தி வெயில் ஏற ஏற வலியும் ஏறும் பாருங்க. மண்டைய எடுத்துத் துண்டா வச்சிரலாம்னு தோணும்.

அதுக்கும் ஒரு மருந்து வச்சிருக்கா ரங்கம்மா. புருசன் பேரு சொல்லாத பொம்பளைக மாதிரி அந்த மருந்துப் பேரையும் சொல்றதில்ல.

வெளிக்கிருக்கப் போறவ மாதிரி போயி வேலிகள்ல படந்திருக்கிற ஒரு கொழைய உருவி அது இன்ன கொழைன்னு யாரும் கண்டு பிடிக்க முடியாத படிக்கிக் கசக்கிக்கிட்டே வீட்டுக்கு வருவா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 ஆம் பக்க தொடர்ச்சி...

## வெற்றியின் முக்கிய...

இப்போது நாம் பொது எதிரணியின் வெற்றியில் பங்குதாரராக உரிமை கொண்டாடுவதை விடவும் நல்லாட்சிக்கான அழுத்தம் கொடுக்கவே தயாராகியுள்ளோம். தேசிய அரசில் பங்கு கொள்வ்து தொடர்பில் நாம் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. அதே போல் தற்போது நாட்டில் ஜனநாயகத்திற்கான பாதை திறந்துள்ளது. மக்கள் மாற்றத்தினை விரும்பி ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். இது இலங்கையின் மாற்றத்திற்கான வரலாற்றின் மைல்கல்.

மேலும் இம்முறை தேர்தலில் பொது எதிரணியின் வெற்றியினை தீர்மானித்ததில் தமிழ் பேசும் மக்களின் பங்கு அதிகமானது. வடக்கு கிழக்கின் வாக்குகளே பொது எதிரணியின் வெற்றியில் முக்கிய பங்கினை எடுத்துள்ளது. அதேபோல் சிங்கள மக்கள் இரு சாராருக்கும் சம பங்கு வாக்குகளை வழங்கியிருக்கின்றனர். அதே போல் 2005 ஆம் ஆண்டில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் தடுக்கப்பட்டமையும் 2010 ஆம் ஆண்டில் 18 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதி வெற்றி பெற்றமையும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியினை தற்பெருமை கொண்ட ஆட்சியாக மாற்றி விட்டது. இம்முறை வெற்றி இருசாராருக்கும் நல்ல படிப்பினையாக அமைந்துள்ளது. இனிவரும் காலங்களில் மக்கள் தான் தீர்மானிக்கும் பிரதான சக்தியாக விளங்குவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்தவின் ஆட்சி...

ஊடகங்கள் எவரினதும் அழுத்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது சாதாரணமாக செயற்பட்டனர். எனினும் ஒரு சிலர் தமது மனச்சாட்சியினையும் மறந்து முன்னாள் ஜனாதிபதிக்கு துணை போனார்கள். அதற்கு எம்மிடம் மன்னிப்பு உண்டு. மேலும் மக்கள் தமது முடிவினை மிகச் சரியாக செய்துள்ளனர். இனிமேல் மைத்திரி அரசாங்கத்தில் மக்கள் தமது உரிமைகளுக்காக போராட வேண்டிய அவசியம் இல்லை. மூவின மக்களும் சுயமாக செயற்பட முடியும் எனவும் குறிப்பிட்டார்.

**அத்துரலியே ரத்ன தேரர்**

சர்வாதிகாரத்தின் மத்தியிலும் பண பலத்தின் மத்தியிலும் ஜனநாயகம் போராடி வெற்றி கொண்டுள்ளது. இலங்கை மக்கள் தமது மனச்சாட்சிக்கு உண்மையானவர்கள் என்பதையும் கற்ற மக்கள் சரியாக தீர்மானமெடுப்பார்கள் என்பதுவும் இம்முறை நிரூபணமாகி விட்டது.

மூவின மக்களும் இன, மத பாகுபாடின்றி ஒற்றுமையாக வாக்களித்து மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளனர். அதேபோல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியினை கவிழ்ப்போம் என நாம் வாக்குக் கொடுத்தோம். செய்து காட்டியுள்ளோம். மேலும் பெற்ற வெற்றியினை இனிமேல் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமாதானத்தினை நாட்டில் நிலைநாட்டவே அனைவரும் கைகோர்த்தோம். அதில் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இரண்டுக்குமே நாம் நன்றி சொல்ல வேண்டும். அதே போல் தேசிய அரசின் வேலைத் திட்டத்தினை சரியாக செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மக்களால் தண்டிக்கப்பட்ட...

ராஜபக்ஷ தோற்ற போதிலும் சிங்களர்கள் அதிகம் வாழும் பெரும்பாலான மாவட்டங்களில் ராஜபக்ஷ தான் அதிக வாக்குகள்ளை பெற்றிருக்கிறார். இதனால் ராஜபக்ச பெற்ற முன்னிலையைக் கடந்து மைத்திரி வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்தது வடகிழக்கு மாகான தமிழர்களின் வாக்குகள் தான் என்பதை மறுக்க முடியாது.

2005 ஆம் ஆண்டு தேர்தலில் மகிந்த வெற்றி பெறுவுதற்கு மறைமுக காரணமாக இருந்தவர்கள் தமிழர்கள் தான். அத்தேர்தலை தமிழர்கள் புறக்கணித்ததால் தான் ரணில் விக்ரமசிங்கவை 1.80 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வழ்த்தி ராஜபக்ஷ ஜனாதிபதியாக முடிந்தது. மகந்த ஜனாதிபதியாவதற்கு காரணமாக இருந்த தமிழர்களே இப்போது அவரை தண்டித்திருப்பது இனிமையான பழிவாங்கல் தான். இதை உணர்ந்து ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் எச்சரிக்கையுடனும், நன்றியுடனும் மைத்திரிபால சிறிசேன நடந்து கொள்ள வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் விரும்புகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்தவின் தோல்வி...

போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

63 வயதான நிமலசிறி அபே விக்ரம என்பவரே இவ்வாறு மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார். (இ-5)

## தகுதியானவர்களே...

சர்களாக மிகவும் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இதற்காக அரசியலை பார்க்கக் கூடாது. தூதரக சேவைகளுக்கு உயர்ந்த தகுதியுள்ளவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## இந்து ஆலயங்களில்...

நம்பிக்கை.

தாங்கள் பதவி ஏற்றவுடன் சகல பிரச்சினைகளையும் பற்றி இத்தருணத்தில் எடுத்துக் கூறுவது பொருத்தம் இல்லை. அதைப்பற்றி விளக்க காலநேரம் அறிந்து விரைவில் எமது மாமன்றம் தங்களுடன் தொடர்பு கொள்ளும். ஆனால் உடனடியாக பின்வரும் அவசர விடயங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

★. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ முடியாது நலன்புரி நிலையங்கள் என்று நாமம் சூட்டப்பட்ட இடங்களில் பலமக்கள் வாடுகின்றனர். அவர்கள் சொந்த இடங்களில் திரும்பிச் சென்று வாழ உடன் வழிவகுக்கப்பட வேண்டும்.

அது அவர்களின் அடிப்படை உரிமையாகும். எவ்வித தாமதமுமின்றி பசியால் வாடும் அந்த மக்களுக்கு (இப்போது நிறுத்தப்பட்டிருக் கும்) உலர் உணவு வழங்க ஒழு ங்குகள் செய்யப்பட வேண்டும். இந்த நாட்டில் எந்தப் பிரஜையும் பசியால் வாட தாங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் என்பது எங்களின் அயரா நம்பிக்கை.

★ மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபையும் எவ்வித தாமதமுமின்றி இயங்குவதற்கு உடனே ஆவன செய்யப்பட வேண்டும்.

★ இந்து ஆலயங்களில் இராணுவத் தலையீடு, புதைபொருள் ஆராய்ச்சியின் ஆதிக்கம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

★ விசாரணையின்றி சிறையில் வாடும் சகல அரசியற் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவை சம்பந்தமான சாதகமான பதிலை தங்களிடமிருந்து கூடிய சீக்கிரம் எதிர்பார்த்து தங்களின் அரசாங்கத்தின் ஆதரவுடன் மாமன்றம் மக்கள் பணிகளைத் தொடர விளைகின்றது என்பதனையும் தெரிவித்து வைக்க விரும்புகின்றோம் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண் டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-5)

30ம் ஆண்டில் தடம் பதிக்கும் உங்கள் பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)





- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 18-01-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-01-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-
GURU

Vacancy for post of Administrator

**Cancer Aid for North-East (CANE)**
**5,Sabapathipillai Road, Uduvil, Chunnakam**

CANE is a UK Registered Charity with a Hospice functioning at the above address. The aim of CANE is to provide Hospice and medical care, prevention of Cancer and palliative care for Cancer patients. It is planned to extend its services to provide home based and terminal care of cancer patients in the near future.

CANE is looking for an experienced Administrator with managerial skills who could manage the hospice with 20-30 staff, in the hospice and in the field. He/She should have a through knowledge of English and Tamil, accounting skills and ability to handle a computer. He/She should be devoted towards patient care, have a sympathetic attitude but with firmness towards patients, relatives and staff.

The selected person will be placed on a contract basis renewable annually and placed on an all-inclusive monthly remuneration of Rs 30,000.00. The appointment will be on a full-time basis. The appointment will be initially on a probationary basis during the first year.

Applicants are requested to send their applications by registered post to reach us by 21/01/2015 addressed to Dr. N.Sivarajah Chairman CANE Hospice, No: 5, Sabapathipillai Road (Off KKS road), Uduvil, Chunnakam. The applicants should give basic information in their Curriculum vitae mentioning their relevant experience.

Applications could also be submitted by email to: nsivaraja@gmail.com, with copy to canejaffna@yahoo.com

Shortlisted candidates will be requested to appear for an interview (C-9789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விவசாயிகளின் நன்மை கருதி

# ஐந்து மாவட்டங்களில் 2200 மண் மாதிரி ஆய்வுகள்

### கிளி. பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமது பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த விவசாயிகள் தங்களுக்குரிய பயிர் செய்யப் படும் நிலங்களின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தருமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கடந்த வருடங்களில் வட பிராந் தியத்திலுள்ள ஐந்து மாவட்டங்கள் அடங்க லாக இரண்டாயிரத்து இருநூறுக்கு மேற்பட்ட மண்மாதிரி ஆய்வு செய்யப்பட்டு பரிந் துரைகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரச கேசரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிப்படைந்ததும் இடப்பெயர்வுகளினால் கைவிடப்பட்டதும் பாலங்கள் மற்றும் உவர் நீர்த் தடுப்பணைகள் சேதமாக்கப்பட்டதனால் மண் மற்றும் பெரும்பாலான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி விட்டதனாலும் மீள் குடியமர்ந்த விவசாயிகள் தங்களுக்குரிய பயிர் செய்யப்படும் நிலங்களின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதன்பிரகாரம் திருநெல்வேலியில் அமைந் துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் கிளிநொச்சியிலும் மண்ணியல் ஆய்வு கூட ங்கள் தேவையான கருவிகளுடன் நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின ராலும் UNDP நிறுவனத்தினராலும் கரு விகள் தருவிக்கப்பட்டன.

தற்போது இவ் ஆய்வு கூடங்கள் விவசாயி களுக்கு தேவையான சகல மண்ணியல் ஆய்வுகளும் மேற்கொள்வதற்கு தரமுயர்த் தப்பட்டுள்ளன. இதன் பயனாக கடந்த வரு டங்களில் வடபிராந்தியத்திலுள்ள ஐந்து மாவட்டங்கள் அடங்கலாக இரண்டாயிரத்து இருநூறுக்கு மேற்பட்ட மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட் டுள்ளன.

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிர் மாற்றீடு செய்யப்படுவதற் காக துல்லியமான பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வெவ்வேறு மண்ணியல்புகளைக் கொண்ட வலயங்களாக பிரிக்கப்பட்டு அவற் றிற்குரிய பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆய்வு கூடங்கள் பெரும் மூலகங்க ளாக நைதரசன், பொட்டாசியம், பொஸ்பரசு மற்றும் சுவட்டு மூலகங்களையும் ஆய்ந்தறி யக்கூடிய வகையில் புனரமைக்கப்பட்டுள் ளது.


இதேவேளை அதிகரித்து வரும் நோய்ப் பீடைத்தாக்கத்திற்கு ஏற்ற வகையில் பரிந் துரை செய்வதற்குரிய நோய்ப்பீடை முகா மைத்துவத்தின் ஆராய்ச்சிக்குரிய ஆய்வுகூட மொன்று வடபிராந்தியத்தில் இல்லாதிருந்தது.

விவசாய அமைச்சின் உதவியுடன் வயற் பயிர் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து சகல வசதிக ளும் கொண்ட நோயியல் ஆய்வு கூடமொன்று நிர் மாணிக்கப்பட்டுள்ளது.

நோய்பீடைகளை ஆராய்ச்சி செய்வது புதிய நோய்த் தொற்றுக்களை தடுப்பது மற்றும் தாவர நோய்கள் சம்பந்தமாக சகல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## சந்தை, பேருந்து நிலையங்களில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

### கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதான சந்தை, பேருந்து நிலையம், கடைத்தொகுதி ஆகிய இடங்களில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதாக பொதுமக்களால் தெரி விக்கப்படுகிறது.

இக் கட்டாக்காலி நாய்களினால் வீதியால் பயணிப்போர் இடர்பாடுகளைச் சந்திப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இவை வீதிகளுக்கு குறுக்காக நடமாடுவதாலும் பாதசாரிகளை விரட்டிக் கடிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் அவைகள் தெருக்களிலும் சந்தைப் பகுதிகளிலும் மலம் கழிப்பதால் சுகாதார சீர்கேடாக அவ்விடம் இருப்பதாகவும் ஈ,கொசு போன்ற நோய்க்காவிகள் அம்மலத் தில் இருந்து விட்டு உணவுப் பண்டங்களில் அமர்வதால் வயிற்றோட்டம் போன்ற ஏனைய நோய்கள் ஏற்படக் கூடுமென மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே சுகாதாரப் பகுதியினர் மற்றும் அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் எடுத்து கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)



லண்டன் நடராஜா அறக்கட்டளையினர் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள முந்நூற்று முப்பத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு பெறுமதி வாய்ந்த உலர்உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கி வைத்ததைப் படத்தில் காணலாம்.

## நிர்வாகத் தெரிவும் கலந்துரையாடலும்

(திருவையாறு)

கிளிநொச்சி விஞ்ஞானவள நிலையத் தின் இவ்வாண்டுக்கான நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூ ரியில் இந்நிலையத்தலைவர் ச.ரகுதரன் தலை மையில் நடைபெற்றது.

இதன் தலைவராக யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மருத்துவ பீட மாணவன் சோ.அச் சுதன், உப தலைவராக கொழும்பு மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் அ.நிரோஜன், செயலாளராக கிளிநொச்சி பல் கலைக்கழக பொறியியல் பீட மாணவன் சு.அனுராஜ், பொருளாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஜெ.காண்டீபன் ஆகியோர் தெரிவாகினர்.

இதன்போது இந்நிலையத்தின் கடந்தகால எதிர்கால நிகழ்வுகள் குறித்து கலந்துரையா டப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

எதிர்வரும் காலங்களில் விஞ்ஞான வள நிலையச் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதுவரை அவர்கள் ஆற்றிய சேவைகள் குறித்தும் நிகழ்வில் கலந்து கொண்ட சுமார் 80 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங் களைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் கலந் துரையாடப்பட்டது.

அத்துடன் விஞ்ஞான பாட ஆசிரியர் பற் றாக்குறையாகவுள்ள பாடசாலைகளில் புதி தாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்ட மாணவர்கள் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் அடு த்து வரும் நாட்களில் விஞ்ஞான செயற்றிட் டங்களை பாடசாலை மட்டத்தில் நடத்துவதற் கும் தீர்மானிக்கப்பட்டது.

இதில் புதிதாக பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான கணித, விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்ட னர். (2-273)




## கணனி கற்கைநெறியும் தையல் பயிற்சியும்

(கிளிநொச்சி)

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் லிற்றில் எயிட் கணனி பயிற்சி நிலையத்தில் புதிய கணனி கற்கை நெறி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் குறித்த பயிற்சி நெறி யானது கிளிநொச்சி திருநகர் வடக்கு கனகராசா வீதியில் அமைந்துள்ள கணனி பயிற்சி நிலையத்தில் இலவசமாகக் நடை பெறவுள்ளது.

ஐந்து மாத இலவச கற்கை நெறியைக் கொண்ட MS Office, Spoken English, தையல் பயிற்சி நெறி ஆகியவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இதற்கான கையேடுகள், தையல் பயிற்சியைக் கற்க விரும்புவோருக்கு நூல் மற்றும் துணிவகைகள் இலவசமாக வழங்கப் படவுள்ளன.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் பயிற்சி நெறியைக் கற்று பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றது. (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தரப்பு நியாயத்தை குன்ஹா எடுத்துக்கொள்ளவில்லை!



நீதிபதி குன்ஹா

"நீங்கள் யார்? உங்களுக்கும் இந்த வழக்குக்கும் என்ன சம்பந்தம்? நீதிமன்றத்துக்குள் ஒழுங்கீனமாக, கும்பல் கும்பலாக நிற்கக்கூடாது. இருக்கைகளில் அமர வேண்டும். நீதிமன்றத்துக்குள் அரசியல் வரக்கூடாது. ஒரு மணி நேரம்கூட வாய்தா கொடுக்க முடியாது" என்று ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு மனுவை விசாரிக்கும் கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி கடந்த 5 ஆம் தேதி முதல் நாள் விசாரணையிலேயே அதிர்ச்சி கூட்டினார்.

ஜெ. தரப்புக்கு எதிராக வாதிட கறுப்புப் பூனை படையோடு சுப்பிரமணியன் சுவாமி கோர்ட்டுக்கு வந்ததால் கோர்ட் வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஜெ. தரப்பில் நவநீதகிருஷ்ணன், குமார், மணிசங்கர் செந்தில், பன்னீர்செல்வம், அன்புக்கரசு, செல்வகுமார், கருப்பையா ஆகியோரும் தி.மு.க சார்பாக குமரேசன், தாமரைச்செல்வன், சரவணன், பாலாஜி, நடேசன், ராமசாமி ஆகியோரும் அரசு தரப்பில் பவானிசிங், மராடி ஆகியோரும் வந்திருந்தனர். இவர்களுடன் தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அதிகாரிகள் குணசீலன், சம்பந்தம் ஆகியோர் வந்திருந்தனர்.

## "வழக்கின் காட் ஃபாதர்!"

நீதிபதி சரியாக 11:00 மணிக்கு தன் இருக்கையில் அமர்ந்தார். சுப்பிரமணியன் சுவாமி எழுந்தார்...

**சு.சுவாமி:** இந்த வழக்கில் என்னையும் சேர்த்து வாதிட அனுமதிக்க வேண்டும்.

**நீதிபதி:** நீங்கள் யார்? உங்களுக்கும் இந்த வழக்குக்கும் என்ன தொடர்பு?

**சு.சுவாமி:** இந்த வழக்கின் முதல் புகார்தாரர். இந்த வழக்கின் காட் ஃபாதர். என்னுடைய புகார் மனுவை ஏற்றுதான் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை விசாரிக்கச் செய்து எஃப்.ஐ.ஆர்., பதிவு செய்தது. இந்த வழக்கில் நான் வாதிட உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

**நீதிபதி:** அந்த ஆவணங்களையும் கோர்ட்டில் சமர்ப்பியுங்கள். பிறகு பரிசீலித்து உங்களை வாதிட அனுமதிக்கலாம்.

இதை அடுத்து சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்தைவிட்டு கிளம்பினார்!

## "அரசியலை உள்ளே கொண்டுவராதீர்கள்...!"

தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பு வழக்கறிஞர் குமரேசன் எழுந்தார்...

**குமரேசன்:** இந்த வழக்கில் அரசு வழக்கறிஞருக்கு உதவியாக, சிறப்பு நீதிமன்றம் அனுமதித்ததைப் போல இந்த வழக்கில் எங்களை 3 ஆம் தர வாதியாக சேர்த்துக்கொணடு எங்களுடைய எழுத்து பூர்வமான வாதத்தைப் பதிவுசெய்ய வேண்டும்.

**நீதிபதி:** இந்த வழக்குக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?

**குமரேசன்:** 2004 இல் சென்னையிலரு ந்து இந்த வழக்கு பெங்களூருக்கு மாற்ற என் மனுதாரரர் அன்பழகன்தான் காரணம்.

**நீதிபதி:** யார் அந்த அன்பழகன்?

**குமரேசன்:** தி.மு.க பொதுச் செயலாளர். உச்ச நீதிமன்றம் எங்களையும் 3 ஆம் தர வாதியாக சேர்த்துக்கொள்ள அனுமதித்திருக்கிறது.

**நீதிபதி:** நீதிமன்றத்துக்குள் அரசியலைக் கொண்டு வராதீர்கள். சிறப்பு நீதிமன்றத்தில் அனுமதித்து இருக்கலாம். மேல்முறையீட்டு மனுவில் ஏற்கெனவே வாதி, பிரதிவாதி இருக்கிறார். உங்களைப் போல பலரும் வருவார்கள். மேல்முறையீடு என்பது கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் குற்றச்சாட்டுகள் தவறானது என்பதை வாதிடுவதும் அதை மறுப்பதும் தான். 3 ஆம் தரப்புக்கு இங்கு வேலை இல்லை.

**குமரேசன்:** இதுபற்றி விரிவாகப் பேச எங்கள் சீனியர் வழக்கறிஞர் ராகேஷ் நாளை வருவார்.

**நதிபதி:** அவர் வருவதற்காகக் காத்திருக்க முடியாது. அவர் உள்ளூரைச் சேர்ந்தவர்தானே உடனே வரவழைக்க முடியாதா?" என்றவர் பவானிசிங்கைப் பார்த்து, "என்ன இது? பலரும் உங்களுக்குப் பதிலாக வாதிட கேட்கிறார்கள். ஆட்சேபணை தெரிவிக்கவில்லையா?" என்றார். பவானி சிங், "அனுமதிக்கக் கூடாது என்று எழுத்து பூர்வமாக மனு கொடுத்திருக்கிறேன" என்றார்.

பின்னர், அன்பழகன் தரப்பு மனுவை வாங்கி, அரசுத் தரப்பையும், ஜெ. தரப்பையும் ஆட்சேபணை மனுத் தாக்கல் செய்யச் சொன்னார். விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது நீதிமன்றத்துக்குள் ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து கடுப்பான நீதிபதி குமாரசாமி, "இப்படி ஒழுங்கீனமாக கும்பல் கும்பலாக நிற்கக் கூடாது. இருக்கைகள் இருக்கின்றன. அதில் அமர்ந்து அமைதி காக்க வேண்டும்"என்றார்.

## முதல் வார்த்தையே வாய்தா...!

சிறப்பு நீதிமன்ற விவாதத்தின்போது ஜெயலலிதா தரப்புமீது வைக்கப்பட்ட முக்கியமான குற்றச்சாட்டு நீதிமன்றத்தை நடத்தவிடாமல் வாய்தா மேல் வாய்தா வாங்கி வழக்கை இழுத்தடித்தார்கள் என்பதுதான். மேல்முறையீட்டு விசாரணையில் ஜெ. தரப்பு வழக்கறிஞர் குமார், மணிசங்கர் ஆகியோரின் முதல் வார்த்தையே வாய்தா வேண்டும் என்று தொடங்கியது.

ஜெயலலிதா தரப்பு மூத்த வழக்கறிஞர் குமார் எழுந்து...

**குமார்:** 12 ஆம் திகதி வரை எங்களுக்கு வாய்தா வேண்டும்.

**நீதிபதி:** எதற்கு வாய்தா?

**குமார்:** டெல்லியைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர்கள் வாதிட வர இருப்பதால் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்க வேண்டும்.

**நீதிபதி:** இந்த மேல் முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் 3 மாதங்களில் முடிக்கச் சொல்லியிருக்கிறது. அதனால் ஒரு மணி நேரம் கூட தர முடியாது. நீங்களே மூத்த வழக்கறிஞர்தானே, நீங்களே வாதிடலாம்.

**குமார்:** 3 மாதங்களுக்குள் முடித்துவிடலாம்.

**நீதிபதி:** சொல்வதற்கு நன்றாக இருக்கும். முடிப்பது கஷ்டம். அதனால் உங்கள் வாதத்தை ஆரம்பியுங்கள்.

குமார் தனது வாதங்களை எடுத்து வைத்தார்.

## "எங்கள் தரப்பு நியாயத்தை குன்ஹா எடுத்துக்கொள்ளவில்லை!"

ஜெயலலிதாவின் வழக்கறிஞர் குமார், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை பதிவு செய்த குற்றப்பத்திரிகையை வாசித்தார்.

**குமார்:** ஜெயலலிதா பிறந்தநாளில் ஆதரவற்ற அநாதைக் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக அர்ச்சனா, அடையார் ஆனந்தபவன் போன்ற பல ஸ்வீட் ஸ்டால்களில் ஸ்வீட் வாங்க ரூ.8 லட்சம் செலவு ஆனது. அந்தத் தொகையை செலவுப் பட்டியலில் எடுத்துக் கொள்ளவில்லை.

**நீதிபதி:** (பவானி சிங்கைப் பார்த்து) ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?

**பவானி சிங்:** பில் இருந்தால்தானே ஏற்றுக் கொள்ள முடியும்?


என் மனுதாரருக்குச் சொந்தமான கட்டடத்தின் மதிப்பை மிகைப்படுத்திக் காட்டி இருக்கிறார்கள். தகுதி வாய்ந்த வல்லுனர்களைக் கொண்டு அளவீடு செய்யவில்லை. சுதாகரனின் திருமணம் 1995 இல் நடைபெற்றது.



ஆனால், திருமணத்துக்காகப் போடப்பட்ட பந்தல, மின்விளக்கு, வாழைத்தோரணம் அனைத்தையும் 1997 இல் கணக்கீடு செய்திருக்கிறார்கள். குத்து மதிப்பாக ரூ.5 கோடி செலவு செய்ததாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மையில் திருமணத்துக்கு ஆன அனைத்துச் செலவுகளையும் சிவாஜியின் குடும்பத்தார்தான் செய்தார்கள். இப்படி எங்கள் தரப்பு நியாயங்கள் எதையும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எடுத்துக் கொள்ளவே இல்லை!

## "கன்னடம் தெரியுமா..?"

**குமார்:** ஆரம்பத்தில் குற்றப்பத்திரிகையில் பதிவு செய்த குற்றச்சாட்டுகளும், அதற்கான பதில்களையும் தமிழிலருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்ததில் பிழைகள் இருக்கிறது. மீண்டும் தெளிவாக ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும்.



நீதிபதி குமாரசாமி

**நீதிபதி:** (பவானி சிங்கிடம்) மொழிபெயர்ப்பு எங்கு செய்யப்பட்டது?

**பவானி சிங்:** தமிழ்நாட்டிலேயே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வந்தது.

**குமார்:** இல்லை. கர்நாடகத் தில்தான் மொழிபெயர்ப்பு செய் யப்பட்டது.

**நீதிபதி:** (குமாரிடம்) உங்க ளுக்கு கன்னடம் தெரியுமா?

**குமார்:** எனக்குத் தெரியாது. என் அம்மாவுக்கும், சகோதரிக்கும் கன்னடம் தெரியும். எனக்கு ஒரு விடயம் தெரியக் கூடாது என்றால் என் முன்னாலேயே கன்னடத்தில் பேசிக் கொள்வார்கள்.

இதனால் நீதிமன்றம் சிரிப்பலையில் மூழ்கியது. அதையடுத்து மாலை இந்த ஆவணங்களை தமிழிலிருந்து ஆங்கிலத்தில் சரியாக மொழிபெயர்த்து வரும் 13 ஆம் திகதி கொடுகக கர்நாடக மொழியாக்கல் துறைக்கு ஆணையிட்டார்.

## "தீர்ப்பை படித்தீர்களா?"

**நீதிபதி:** வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவிப்பு சதவிகிதம் எவ்வளவு?

**பவானி சிங்:** தெரியவில்லை. (மராடியிடம் கேட்டு 714% என்றார்.)

**நீதிபதி:** 714% எப்படி வந்தது?

**பவானி சிங்:** தெரியவில்லை.

(அன்பழகன் வழக்கறிஞர் சரவணன் இதற்கு கணக்கு கூறினார்.)

**நீதிபதி:** எத்தனை எதிர் தரப்பு சாட்சி களை விசாரித்தீர்கள்?

**பவானி சிங்:** தயக்கம் (மராடியை கேட்டு 99 பேர் என்றார்.)

**நீதிபதி:** அவர்களின் சாட்சியங்களை ஏனஏற்றுக்கொள்ளவில்லை?

**பவானி சிங்:** (மௌனம்)

**குமார்:** சிறப்பு நீதிமன்ற நீதிபதி சிறு வரியில் சொல்லியிருக்கிறார். அந்த சாட்சியங்கள் குற்றவாளிகளுக்கு வேண்டப்பட்டவர்களாம். ஆனால், எப்படி வேண்டப்பட்டவர்கள் என்று சொல்லவிலலை. இந்த சாட்சியங்கள் அனைத்தையும் வருமானவரித் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**நீதிபதி:** (பவானி சிங்கைப் பார்த்து) சிறப்பு நீதிமன்ற தீர்ப்பைப் படித்துவிட்டீர்களா?

**பவானி சிங்:** படித்துவிட்டேன்.

**நீதிபதி:** பிறகு ஏன்? பதில் சொல்லத் தயங்குகிறீர்கள்?

**பவானி சிங்:** (மௌனம்)

## "அன்பழகனை ஆஜராகச் சொல்லுங்கள்!"

தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பு வழக்கறிஞர் சரவணன் நீதிபதியிடம் நடைபெற்ற வாதத்திலிருந்து...

**சரவணன்:** உச்ச நீதிமன்ற ஆணைப்படி அரசு வழக்கறிஞரை கர்நாடக அரசும், கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியும் கலந்து ஆலோசித்து நியமிக்கப்பட வேணடும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால், கர்நாடக அரசு இந்த வழக்கில் அரசு வழக்கறிஞரை நியமிக்கவில்லை. அதனால் பவானி சிங் ஆஜராவது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது.

**நீதிபதி:** அந்த உச்ச நீதிமன்ற உத்தரவைக் காண்பியுங்கள்.

சரவணன் உச்ச நீதிமன்ற உத்தரவைக் காண்பித்தார்.

**நீதிபதி:** நீங்கள் கர்நாடக அரசுக்கு கோரிக்கை வையுங்கள் அல்லது வழக்குப் போடுங்கள். என்னிடம் ஏன் வந்திருக்கிறீர்கள். என்னை உச்ச நீதிமன்றம் 3 மாதத்தில் விசாரித்து வழக்கை முடிக்கச் சொல்லியிருக்கிறது. நீதிமன்ற நேரத்தை வீணாக்காதீர்கள். (பவானி சிங்கைப் பார்த்து) உங்களை நியமித்தது யார்?

**பவானி சிங்:** தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நியமித்திருக்கிறது.

**நீதிபதி:** (சரவணனிடம்) நீங்கள் அரசு வழக்கறிஞரை நியமிக்கப் போகிறீர்களா? ஏன் அரசியலைப் புகுத்துகிறீர்கள்? உங்கள் மனுதாரரர் யார்?

**சரவணன்:** அன்பழகன்

**நீதிபதி:** அவர் எங்கே? அவரை ஆஜராகச் சொல்லுங்கள்.

**சரவணன்:** அவர் 92 வயதுடைய முதியவர். அவர் கோர்ட்டுக்கு வர முடியாது. கோர்ட்டும் விதிவிலக்கு அளித்திருக்கிறது. அவரின் சார்பாக நான் ஆஜராகி இருக்கிறேன். பவானி சிங்கை நீக்க வேண்டும். அதற்கான மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நீதிபதி:** (கோபத்துடன்) தேவையில்லாமல் மனு அளிக்க இது அரசியல் மேடை கிடையாது. என்னுடைய பணிக்கு இடையூறு செய்ததாக சி.ஆர்.பி.சி-345 பிரிவை பயன்படுத்த நேரிடும். நீங்கள் ரிட் மனுத்தாக்கல் செய்யுங்கள்.

**சரவணன்:** ஏற்கெனவே ரிட் மனுத் தாக்கல் செய்திருக்கிறோம். நாளை விசாரணைக்கு வர இருக்கிறது.

இதையடுத்து காரசாரமான இந்த விவாதம் நிறைவு பெற்றது. இப்படி வழக்கை எடுத்த நாள் முதல் விறுவிறுப்புடன் தனது விசாரணையைத் தொடங்கி நடத்தி வருகிறார் நீதிபதி குமாரசாமி!

*-ஜூனியர் விகடன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்பட இடமளிக்கப் போவதில்லையாம்

## சம்பிக்க ரணவக்க திட்டவட்டம்

(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பிற்கும் நாட்டின் ஐக்கியத் தன்மைக்கும் குந்தகம் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதி செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். நாட்டின் அரசியல் பயணத்தை தீர்மானிக்கும் கட்சியாக ஜாதிக ஹெல உறுமய செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் நிலவி வந்த ஊழல் மோசடி மிக்க சர்வாதிகார ஆட்சியை மக்கள் தோற்கடித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் அவரது சகோதரர்களும் எவ்வித வெட்கமும் இன்றி அரச பணத்தை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தினர்.

250 பில்லியன் ரூபா பணம் தேர்தல் பிரசாரத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. இது நாட்டின் மொத்தச் செலவில் 10 வீதமாகும்.

போலியான தேசப்பற்றினை தோற்கடித்து மெய்யான தேசப்பற்று வெற்றியீட்டியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் வாக்குகளினால் மட்டும் வெற்றியீட்டவில்லை.

அந்த இரண்டு கட்சிகளின் ஊடாக 12 வீதமான வாக்குகள் கிடைத்துள்ளன.

ஏனைய வாக்குகள் தெற்கு மற்றும் ஏனைய மக்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளாகும்.

நாட்டின் ஐக்கியம் மற்றும் தேசியப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

சிங்கள, தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களினதும் உரிமைகள் உறுதி செய்யப்படும் என சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்தரமுல்ல பன்னிப்பிட்டிய வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்தர்களே தோல்வியைத் தழுவினர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சிங்கள பௌத்தர்கள் தோல்வியைத் தழுவியுள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடையவில்லை.

சிங்கள பௌத்தர்களே தோல்வியைத் தழுவியுள்ளனர்.

இந்தத் தோல்வி வேதனையளிக்கின்றது. கூடிய காலம் செல்லும் முன் மக்களுக்கு இந்த உண்மை புலப்படும்.

ஏனைய இன சமூகங்கள் தங்களது இனம் பற்றி சிந்தித்து செயற்பட்ட போது, சிங்கள பௌத்தர்கள் இனம் பற்றி கரிசனை காட்டவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்றாலும் பௌத்த மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவையை பொதுபல சேனா தொடர்ந்தும் ஆற்றும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# குற்றவாளிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே தண்டிக்கப்பட வேண்டும்-ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

குற்றவாளிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே தண்டிக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குரோதம், கோபம் அல்லது பழி வாங்கும் எண்ணத்துடன் செயற்படுவதனை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

குற்றச்செயல்கள் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்பட வேண்டும்.

தற்போதைய சட்டங்களை மேலும் வலுவானதாக்கி குற்றாவளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தேர்தலை முன்கூட்டியே நடத்தினார்.

ஆட்சி அதிகாரத்தை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு மகிந்த தேர்தலை நடத்தினார்.

எனவேதான் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நாம் கடுமையான தேர்தல் பிரசாரமொன்றை முன்னெடுத்தோம்.

தேர்தல்களில் முறைகேடுகளைச் செய்ய அரசாங்கம் மேற்கொண்ட சகல முயற்சிகளையும் நாம் வெற்றிகரமாக முறியடித்தோம்.

பெருமளவில் பணம் வாரி இறைக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தல் இதுவாகும். தொடர்ந்தும் பணத்தைக் கொண்டு தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என்பது இந்த தேர்தல் முடிவுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் அரசாங்கம் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்தது.

எனினும் நாட்டு மக்கள் இந்த விடயங்களை தெளிவாக புரிந்து கொண்டு சுய சிந்தனையுடன் சிறந்த முறையில் வாக்களித்தனர்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்பட வேண்டும். 18 ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# மோசடிகளுக்கு பதில் கூறாமல் ஆளுநர் பதவி விலக முடியாது

## ஐ.தே.க.தெரிவிப்பு

முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகளுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதில்கூற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அஜித் நிவாட் கப்ரால் தமது பதவியை இராஜினாமா செய்த நிலையிலேயே சில்வாவின் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக கப்ரால் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்தன.

இவற்றில், பங்கு பரிமாற்ற நிறுவனத்தின் செயற்கை நிதி மாற்றல் நடவடிக்கை, ஊழியர் சேமலாப நிதி மோசடிகள் போன்றவை அடங்கும் என்று ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

எனவே இந்த குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கூறாமல் கப்ரால் பதவிவிலக முடியாது என்று சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர கைது

(கொழும்பு)



பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக போட்டியிட்ட காலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் பிரதி அமைச்சரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கஹவத்தைப் பிரதேசத்தில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மீது, பிரதி அமைச்சர் பிரேமலால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் கஹவத்தை பிரதேச வர்த்தகர் சங்க செயலாளர் உயிரிழந்திருந்தார்.

சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியிருந்த பிரதி அமைச்சரை அளுத்கம பிரதேசத்தில் வைத்து நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர வாக்களிப்பில் கூட [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## இளமை இதோ!

"தாத்தா உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்களாம் தாத்தா" அப்படியா? அது என்ன மருந்து?

"கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக் கிறார்கள்"

"ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச்சாறு கொடுப்பது வழக்கம்"

" ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ்ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் கற்றாழை டொனிக்கே கடைகளுக்கு வந்துவிட்டது"

" அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

" முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார்களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டு பிடித்திருக்கிறார்கள்" "அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் கற்றாளை சாலட் கிடைக் கிறதாம்"

" நல்ல செய்தி கூறினாய் தம்பி அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

" இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன்கள் 2015

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| செவ்வாய் | புது வருட கிரக நிலை | | குரு (வக்) |
| புதன் சுக்ரன் | | | |
| சூரியன் | சனி | | ராகு |

### ஏழில் குரு வந்தால் வாழ்வில் வளம் சேரும்! நம்பிக்கைக்குரிய நண்பர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகும் கும்ப ராசி நேயர்களே!

வளர்ச்சிப் பாதைக்கு வித்திடும் விதத் தல் ஜூலை மாதத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்களுக்கு கிடைக்கப் போகின் றது. அதுவரை 6 ஆம் இடத்தில் சஞ்சரி த்து வந்த குரு வக்ர இயக்கத்தில் இருப்ப தால் வழிபாட்டின் மூலம் நீங்கள் வளர்ச்சி யைக் கூட்டிக்கொள்ளலாம். குரு மங்கள யோகத்தோடும், குரு சுக்ர பார்வையோடும், புத, சுக்ர யோகத்தோடும் பிறந்திருக்கும் புத்தாண்டில் மகத்துவம் அதிகரிக்கப் போகின்றது. மக்கள் போற்றும் விதத்தில் வாழ்க்கைத் தரம் உயரப் போகின்றது.

வருடத் தொடக்கத்தில் 10 இல் சனி சஞ்சரிப்பது யோகம்தான். முத்தான தொழிலை அமைத்துக்கொடுக்கும். முன் னிலையிலிருக்கும் பலரும் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். வெற்றிக்குரிய சூரியனும், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கி ன்றார். அற்புதப் பலன்களை அள்ளி வழங் கும் விதத்தில் அத்தனை கிரகங்களும் இருந்தாலும், அஷ்டமத்தில் அல்லவா ராகு சஞ்சரிக்கின்றார். அதுமட்டுமல்லாமல் வாக்கு ஸ்தானத்தில் கேது வகையாக இடம்பெறுகிறார். எனவே, எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்ய வேண்டியது முக்கியம். கேது பலத்தால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. எதைச் செய்வேன் என்று நீங்கள் வாக் குறுதி கொடுக்கிறீர்களோ, அதை நீங்கள் செய்ய இயலாது போகும். எதை நீங்கள் செயய இயலாது என்று நினைக்கிறர்களோ அதை நீங்கள் செய்து காட்ட இயலும். இங் ஙனம் செயலில் மாற்றத்தைக் கொடுப்பவர் கேதுபகவான்.

எனவே ராகு-கேது, சனி, குரு ஆகிய நான்கு கிரகங்களையும் பொறுத்தே வழி யிலுள்ள தடைகற்கள் அகன்று படிக்கற்க ளாக மாறும். உங்களது சுய ஜாதகத்தில் சனி மற்றும் ராகு-கேதுக்கள் இருக்கும் நிலையை அறிந்து கொள்ள வேண்டும். அதைப் பார்க்கும் கிரகங்களால் பலனும் கிடைக்கலாம், பாதிப்புகளும் உருவாகலாம்.

எனவே புத்தாண்டின் கிரக நிலைக் குரிய கட்டத்தையும் உங்கள் சுயஜாதகத் தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வருடப் பிறப்பு நாள், பிறக்கும் நட்சத்திரம், இந்த வருடத்தில் பெயர்ச்சியாகும் பெரிய

## ஏழில் குரு வந்தால் வாழ்வில் வளம் சேரும்!

கிரகங்களின் மாற்றங்கள் இவை அனை த்தும் உங்கள் திசாபுத்திக்கு ஏற்ப அனு கூலம் தரும் விதத்தில் அமைந்திருந்தால் எதிர்பார்ப்புகள் எல்லாம் இந்த ஆண்டு நிறைவேறும்.

2015 ஆம் ஆண்டு உங்கள் ராசி நாதன் சனிக்குரிய "8" எண் ஆதிக்கத்தில் பிறப்பது யோகம்தான். ராகு- கேதுக்களு க்கு மட்டும் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்து கொள்ளுங்கள்.

**01.01.2015 -04.07.2015**

ஆண்டின் தொடக்கத்தில் 10 இல் சனி இருப்பதால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை உருவாக்குவீர்கள். தொடர் கதையாய் வந்த கடன்சுமை குறைய புது வழி பிறக்கும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. தந்தையின் உடல் நலத் தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கர்ம ஸ்தானம் என்று அழைக்கப்படும் 10 ஆம் இடத்தில் சனி வரும்பொழுது இது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை மேற்கொள்வது நல்லது.

சென்ற ஆண்டில் சிறப்பாக நடைபெறாத தொழில் இந்த ஆண்டில் எதிர்பார்த்ததைக்



காட்டிலும் கூடுதலான லாபம் தரும். பண பலத்தைக் கொண்டு உங்களோடு மோதிய வர்கள்கூட சமரசத்திற்கு ஒத்து வருவர்.

பாம்பு கிரகத்தின் பார்வை சனியின் மீது பதிவதால் உத்தியோகத்தில் உள்ளவர்களு க்கு ஒரு நிலையான பொறுப்புகள் கிடைக் காது. பல இடங்களில் வேலை பார்த்து, வேலை பார்த்து அலுத்துவிட்டதே என்று சொல்வர். 2 ஆம் இடம் என்பது குடும்ப ஸ்தானமாகவும் கருதப்படுகின்றது. எனவே அந்த இடத்தில் கேது இருப்பதால் குடும்பத் தில் குழப்பங்களும், குணம் சரியில்லாத வர்களோடு வைத்துக்கொள்ளும் பழக்கத் தால் மன பயமும் வந்துகொண்டேயிருக்கும்.

ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்து சேரும், வரன்கள் வருவது திருப்திகரமாக அமையவில்லையே என்ற கவலை மேலோங்கும். சந்திரன் 3 இல் சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தினர் பிரச் சினைக் குரியவர்களாக இருப்பர். குறிப்பாக 2,9 இற்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெறுவதால் கடைசி நேரத்தில் காரியங் களில் வெற்றி கிடைத்துவிடும்.


### குருவின் பார்வை பலன்கள்!

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கின்றார். எதிர்ப்பு, வியாதி, கடன் என்று வர்ணிக்கப்படும் ஆறாமிடத்தில் தனலாபாதிபதியான குரு சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. இருப்பி னும் அதன் பார்வை 2,10,12 ஆகிய இடங் களில் பதிவதால் அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. எனவே உத்தியோகம், ஜீவனம், ஆகியவற்றில் உன் னத மாற்றங்கள் உருவாகப் போகின்றது. குரு இருக்குமிடத் தைக் காட்டிலும் பார்க்குமிடத் திற்கே பலன் அதிகம். அந்த குரு உச்சம் பெற்றுப் பார்க்கிறார் என் பதால் அதன் பார்வைக்கு மிகு ந்த சக்தியுண்டு. 6 ஆம் இடத்தில் வந்த குரு உங்கள் ஆவல்களைப் பூர்த்தி செய்யும். தேவை களை நிறைவேற்றும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் இனிப் படிப்படியாகக் குறை யும். உங்கள் குரலை செவிசாய்த்துக் கேட்காத நண்பர்கள் இனி கேட்பார்கள். தொழில் வளர்ச்சிக்கு மாற்று இனத்தவர்கள் பங்கு தாரர்களாக மாறுவர். வீடு, தோட்டம் என்று வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

திடீர்ப் பயணங்கள் தித்திக்க வைக்கும். அந்நிய தேசத்திலிருந்து வரும் தொலை பேசிவழித் தகவல் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றும். வியாழன் தோறும் விரத மிருந்து குரு தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் வண்ண வஸ்திரம் சாற்றி, சுண்டல் நைவே த்தியமிட்டு அர்ச்சனைகள் செய்து வந்தால் எந்நாளும் இனிய நாளாக மாறும். குரு கவசம் பாடினால் குழப்பங்கள் தீரும்.

பௌர்ணமியன்று மலைவலம் வரு வதன் மூலம் மகத்தான பலன் கிடைக்கும். அயன, சயன ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தம்பதியருக்குள் ஒற்றுமை பலப்படும். நீண்ட தூரப் பயணங்களை ஒரு சிலர் மேற்கொள் வதன் மூலம் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தி யாகும். குடும்ப உறவினர்களுக்கு குந்தகம் விளைத்தவர்கள் விலகுவர்.

**06.07.2015- 31.12.2015**




இக்காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழவிருக் கிறது. உங்கள் ராசிக்கு 7 ஆம் இடமான சிம்மத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். சப்தம ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான பலன்களை அள்ளி வழங்கு வார். குருவின் நேரடிப் பார்வை உங்கள் ராசியில் பதிவது யோகம்தான். இதுவரை இருந்த ஆரோக்கியப் பாதிப்புகள் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளியும். ஊக்கமும், உற்சாகமும் உள்ளத்தில் குடியேற தாக்கங் களிலிருந்து விடுபட்டு தன வரவைத் தேடிக் கொள்வீர்கள்.

ஜூலை மாத குருப்பெயர ச்சிக்குப் பின்னால் உங்கள் ராசியையும், 3,11 ஆகிய இடங்களையும் குருபார்க் கப் போகிறார். எனவே வழக்குகளில் வெற்றி கிடை க்கும். வாய்தாக்கல் ஓயும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சிகள் அனைத்துமே அனுகூலமாக இருக்கும்.

மனைவி, மக்களுடன் ஏற்பட்ட மனஸ் தாபங்கள் மறையும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவர். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித் துக் கொடுப்பர். கடித அனுகூலம் உண்டு. குழந்தைகளின் வெளிநாட்டு முயற்சிக்கு வித்திடுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை வந்துசேரும். கண்படும் விதத்தில் ஒரு சிலருக்கு வளர்ச்சி கூடும். கனவுகள் பலித மாகும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள்கூட வந்திணைந்து உங்கள் வளர்ச்சிக்கு வித் திடுவர்.

### குருவின் வக்ர காலமும், சனியின் வக்ர காலமும்!

வருடத் தொடக்கத்தில் வக்ரமாகும் குரு 14.04.2015 வரை வக்ரம் பெறுகின்றார். அதே நேரத்தில் சனிபகவான் 15.03.2015 இல் விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார். 12.06.2015 முதல் 05.09.2015 வரை துலாத்தில் வக்ரம் பெறுகின்றார். இந்த வக்ர காலத்தில் இடையூறுகள் மேலோங் கும். வரவு செலவுகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நண்பர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பணப் பற்றாக்குறை ஏற்படும். பாசம் காட்டியவர் கள் விலக நேரிடும். அதே நேரம் சனியின் வக்ர காலத்தில் ஆரோக்கியத் தொல்லை கள் அதிகரிக்கும். மனப்பயம் கூடும். தடை களும், தாமதங்களும் வந்துசேரும். புது முயற்சிக்கு கைகொடுத்து உதவுவதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். எதையும் யோசித்தும், இறை வனை பூஜித்தும் செய்வது நல்லது. குரு சனி வழிபாடு குதூகலத்தை வரவழைத் துக்கொடுக்கும்.

### கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு!

வருடத் தொடக்கத்தில் உச்சகுரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் குடும்பச் சுமை கூடும். செலவுநடைகள் அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். குடும்ப உறுப் பினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதிகாண இயலும். விரய ஸ்தானம் மேலோங்கியிருப்பதால் வர வைக் காட்டிலும் செலவு கூடும்.

குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் வாழ்க்கையில் வசந்தகாலம் உருவாகப் போகின்றது. விவாகப் பேச்சுக்கள் முடிவ டையும். வீடு, மனை வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில் தொடங்கும் முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்துதவு

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

வர். சனி 10 இல் சஞ்சரிப்பதால் பெற்றோர் உடல்நலனில் கவனம் தேவை. கூடுதல் லாபம் தரும் விதம் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்ப வர்களுக்கு புதிய பொறுப்புகள் பதவிகள் உண்டாகலாம். 8 இல் ராகு 2 இல் கேது இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரமும், துர் க்கை வழிபாடும் சந்தோஷம் வழங்கும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

சனிக்கிழமை தோறும் சிவாலயம் சென்று விநாயகர், சர்வேஸ்வரன், உமாதேவியை வழிபடுவதோடு சனிபகவான் சன்னிதியில் எள் தீபம் ஏற்றுங்கள். கார்த்திகை விரத மிருந்து கந்தப் பெருமானை வணங்கி னால் நேர்த்தியான வாழ்வு அமையும்.

நாளை மீனம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## சிறுவர்களை வேலைக்கமர்த்தாதீர்கள்...!?

ஐந்திலிருந்து ஐநூறு அடிகள்
ஐம்பதில் எத்தனையோ- அதுவும் சாதனைதான்
நான் படைத்த சாதனை- ஏனென்றால்
போன ஜென்ம புண்ணியமாம்
அந்த முதலாளி அடிக்க மட்டும்தான்
கையோங்குவார்
வீட்டிலும் அப்படியோ!?
எனக்கு வீடு இல்லை
இருந்தாலும் போகவிடமாட்டார்
நான் குளித்து பத்து நாளாம்...
எனக்கே தெரியல- அன்றொரு நாள்
மழையில் நனைந்தது
நல்ல ஞாபகம்- மழைக்கு என்னை
ரொம்பப் பிடிக்கும்
எனக்கும் மழையை ரொம்பப் பிடிக்கும்
முதலாளிக்கு மட்டும் ஏன்
என்னைப் பிடிக்கவில்லை?
பள்ளிக்கூடம் போனதில்லை-ஆனால்
வாசிக்கத் தெரியும் எனக்கு
பாதி கடித்த வடையுடன்- எங்கள் ஹோட்டலில்
ஒருவர் எட்டியெறிந்த பேப்பரைக் பிரிக்கிறேன்
வடைக்காகத்தான்
நேற்றுக்காலையில்தான் சாப்பிட்டேன்
நினைவுடன் படித்தேன் பேப்பரை
சிறுவர் தின பிரகடனம்
சிறுவர்களை வேலைக்கமர்த்தாதீர்கள்...
என்னபொருள்... விளங்கவில்லை
யார் சிறுவர் புரியவில்லை

**தர்ஷி**
**யாழ்**

## சீதனம்

பெண்ணைப் பெற்று
பெருமை கொண்டு
காதுகுத்தி அழகுபார்த்து
கவனமாய்க் கல்வி கற்க
கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து
இடைநடுவில்- சற்று
வழமைபோல் வளர்ந்திட
வரையறைகள் பலவிதித்து
வன்முறைக் குணம் தவிர்த்து
காமர் கண் மறைத்து
கல்யாணம் என்று சொல்லி
கைபிடிக்கும் நேரம் வரும்
வதரட்சணை பெரும் பிரச்சினையாகி
வாழ்க்கையை வாழமுடியாமல்
கவலைப்பட்டு கண்ணீர்விட்டு
விரக்தியை சம்பாதிக்கும்
வீணான வாழ்க்கை உன்னால்

**ப.துதீஸ்குமார்**
**நல்லூர்**

நீ வென்று விட்டாயா?
உன் மகிழ்வு அத்தனையையும்
உன்னுள் அடக்கு
ஏனென்றால்
உன்னுடனான போட்டியில்
தோல்வியுற்றவன் மனமோ
எரிமலையாய்
குமுறிக்கொண்டிருக்கும்
புரிந்து நடந்துகொள்
உன் கொண்டாட்டம்
அவர் இதயத்தை
முள்ளாய்க் கிழிக்காமல்

மாவை. நா.கஜேந்திரன்

## மனம் மாறும் மனிதருலகம்

நீயென்றும் நானென்றும்
நாளெல்லாம் பிரித்து வாழும்
பகுத்தறிவுள்ள மானிடருலகம்
பதவிவெறி பணத்தாசை
பாரபட்சங்கள் பிணமாய் போகும் வரை!
புரிவதில்லை ஒருபோதும்
பட்டுத் தெளியும்போதே கண்ணீர் சிந்தும்
தமக்கென நிரக்கதி தோன்றும் போதே!
நிலைமாறும் உலகமில்லை இது!
மனம்மாறும் மனிதர்கள் உலகமிது!

**அரியாலையூர்**
**மிஷாந்தி செல்வராஜா**



## மறு ஜென்மம் என்றிருந்தால்...

வயிற்றோடு வலிதந்து, வெளிவந்து
தாய்முகம் பார்த்து, சிரித்த
அந்த நொடியிலே வலிமறந்து
மனம் உவந்த தாயவளின் திருமுகமதை
மறந்திட மனம் வருமா மண்ணதிலே???
மறுமுறைபிறப்பின் மடிமீது தாங்கவேண்டும்
என் அன்னையவளை என் பிள்ளையாய்...

*க.நிராஜ்*
*பொலிகண்டி தெற்கு*

## அம்மா என் ஆசை

அம்மா உன் மடி மீது
உறங்க ஆசை
அம்மா உன் தாலாட்டு
பாட்டு கேட்க ஆசை
அம்மா உன் சிரிப்புடன்
உன்னிடம் முத்தம்
கேட்க ஆசை
இன்று உன்னிடம்
எல்லாம் கிடைத்து விட்டது
அம்மா எனக்கு

*எஸ்.புவித்ரா*
*சாவகச்சேரி*

## தாலாட்டு

தாயே
நான் குழந்தையாக
இருக்கும்போது- என்னை
நீ தாலாட்டினாய்
அன்று நினைத்தேன்
நீ குழந்தையாகும்போது
உன்னை நான் தாலாட்ட
வேண்டும் என

*சி.பிரகாஸ்*
*கரவெட்டி*

# மௌனத்தின் தேடல்- 235

## அன்பான அம்மா

அன்னை தன் மடியணைத்து
அரவணைத்து அமுதூட்டி
அற்புதமாய் நான் வாழ- நல்ல
அருள் தந்தாய்என் தாயே - இவ்
அகிலத்தின் ஒளிவிளக்கும் -நீயே
அன்பான அம்மா நீ வாழ்க...!

*கு.ராதா*
*இணுவில் மேற்கு*

## இதற்கு விலையேது

உலகம் நீயெனும் குனிவும்
வானம் நீயெனும் நிமிர்வும்
மொழிகள் கடந்த மலர்வும்
வலிகளாற்றும் மடியும்
நம்பிக்'கை' பற்றுதலும்!
விலைகள் கடந்த செல்வங்கள்
விளையாடுமிடம் கண்டேன்

*து.கருணாகரன்*
*உதயநகர் கிழக்கு*

## கனவு மெய்ப்பட வேண்டும்

அன்னையின் மடியில்
அகமகிழ்ந்து
மழலைபேசும் சின்னக்கண்ணா
அவள் கனவுதனை அறிவாயோ?
நீ வளர்ந்து
கல்வி, செல்வம், வீரம்
சகல பாக்கியங்களும் பெற்று
உண்மையை உயர்த்தும் ஏணியாக
தாழ்ந்தோரைக் கரைசேர்க்கும் ஓடமாக
உலகுக்கோர் உத்தமனாக
வாழவேண்டும் என்பது தானடா

*லீலா சிவவடிவேல்*
*இணுவில் மேற்கு*

## நம்பிக்கைப் பரிசு

பெரிய அழிவில் மகள்
விட்டுச்சென்ற பரிசா?
பெரியகுழியுள் கண்டெடுத்த
பெரும் பரிசா?
பேதைமனமே உன்பெரும்
குறைதீர்த்த களிப்பா?
கீதைசொன்ன கண்ணன்தான்
தவழும் களிப்பா?
கொன்று குவிக்கும் கொடுமைகள்
நிறைந்த பாரில்
வென்றிடுவான்
வெற்றி உனக்களிப்பான்

*பொ.புனிதன், வரியப்புலம்*

## முத்தமும் தாலாட்டும்

கருவாகி உருவாகி
புதுவடிவம் பெறுவதில்
குழந்தையும் கவிதையும்
ஒருவகையில் ஒன்றே
இவ்விரண்டிற்கும்
வித்தியாசம் காலமே
துன்பம் தூரமலென்றும்
இன்முகம் காட்டி
தூங்கும் குழந்தைகளுக்கு
நித்தமும் கிடைக்கும்
முத்தமும் தாலாட்டும்
நின்று நிலைக்குமென்று
நான்கு பேர் பாராட்டினால்
கவிதைக்கும் கிடைக்கும்
பரிசும் பாராட்டும்

*க.நாகராசா*

## பாசவலை

அன்பெனும் சோலையில்
அணைபோட்டு வளர்த்தவளே
பசியென்று அறியாமலே வளர்ந்தேனே
கண்ணே என்று கட்டியணைத்தவளே
எப்போ நடப்பேன் என்று
கனவு காண்கிறாயா
தத்தி தவழுவேன்
தவண்டு எழுந்திடவே
நீ எண்ணியதை சாதித்திடுவேன்


*ஜோ.சாருக்ஷ, பருத்தித்துறை*

## முத்தமிடும் தாயே...!

பெற்ற மகனைப் பாசத்தோடு...
முத்தமிடும் தாயே!
போட்டி நிறைந்த உலகில்
உன் மகனைக் கல்வியிலே
வீரனாக வளர்த்துக்கொள்
அப்போதுதான் அவனால்
எதிர்நீச்சல்போட்டு...
உங்கள் எதிர்பார்ப்பை
நிறைவு செய்ய முடியும்

*வ.ச.செல்வராசா, திருநாவலூர்*

# மௌனத்தின் தேடல் -236



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.01.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பறிகொடுத்திட்டேன்

"பிள்ளையைப் பள்ளிக்கூடம் விட்டுட்டு வாறன் எண்டிட்டு போன மனுசன் இவ்வளவு நேரமும் காணேல்லை. என்ன பிரச்சினை என்று பாப்பம் என்று போனால், அங்கை பள்ளிக் கூடத்துக்கு அவர் வரவே இல்லையாம்,இடையிலை என்ரை அக்கான்ரை பெடியனோடை பிள்ளையை அனுப்பிப் போட்டு வேறை எங்கையோ அவசரமாப் போனவராம்,"

"எங்கை போனதிந்த மனிசன் எனக்கு நெஞ்சுக்குள்ள பக்.... பக்.... என்று அடிக்கத் தொடங்கிட்டுது"."தோசை சுட்டு பருப்பு சாம்பாரும் வைச்சு, இந்த மனிசனுக்கு சம்பலும் அரைச் சாத்தான் சாப்பிடும், என்றிட்டு எல்லாம் செய்து முடிக்க, பிள்ளை நேரம் போட்டுதென்று கத்த, அவரும் அந்தரப்பட்டு சாப்பிடாமலே போனவர்"

"மறக்கவே முடியாது, கத்திக் கத்தியழுதேன்.

கடைசியிலை எனக்குத் தெரிஞ்சு போச்சு. இந்தாள் இல்லாமல் என்னாலை ஒரு நிமிசம் கூட இருக்க முடியாது. ஓடிப் போய் எங்கடை வீட்டுக் கிணத் துக்குள்ளை பாய்ஞ்சிட்டன். எல்லோரும் சேர்ந்து காப்பாத்திட்டினம்.

"நீயும் போனா பிள்ளையள் என்னடி செய்யப்போகுதுகள்?, பேசாமல் அதுகளை வளர்த்து, அவன் ஆசைப்பட்ட மாதிரி வளர்த்தெடு."

வந்து நெத்தியிலை பெரிய குங்குமப் பொட்டா வைச்சுக் கொண்டு தான் இருப்பன்., வீட்டு முத்தத்திலை நிக்கிற ரோசாப்பூவிலை ஒண்டை சும்மா கொண்டையிலை வைச்சிருப்பன். இதிலையெல்லாம் எனக்கொரு சந்தோசம். எல்லாம் முடிஞ்சு போச்சு.

இதையெல்லாம் ஒருநாள் யோசிச்சுக் கொண்டிருக்க திடீரென்று நெஞ்சு வலிக்கத் தொடங்கீட்டுது. மயக்கம் வாறமாதிரி இருந்து பிறகு ஆஸ்பத்திரிக்கு போய் கொஞ்ச மருந்தும் எடுத்தனான். பசியில்லை, நித்திரையில்லை என்று அதுக்கும் கேட்டுக் கொஞ்சம் குளிசை வாங்கினான்.

சாப்பாட்டுக்குக் கூட கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கறம். சரி ஏதாவது வேலைக்குப் போவம் எண்டு வெளிக்கிட்டா,

"நானென்னநடரிஞ்சமனுசியே?"

எவ்வளவு கதைக்குதுகள்."

நான் சொந்தங்களின்ரை ஒரு நல்லது கெட்டதுக்கும் போறதில்லை. நானாகவே ஒதுங்கிடுவன் பிறகு "பிள்ளை நீ கொஞ்சம் முன்னுக்கு வராதை" எண்ட கதைக்கெல்லாம் நான் இடம் தருவதில்லை. பேசாமல் இருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லை.

வழக்கம் போல வெங்காயம் நடுகைக்கு போயிட்டு வந்து கொண்டிருந்தேன். ஒரு தறை வெங்காயம் அறுத்து, நட்டு முடித்தால் மொத்தமாக ஆயிரத்து ஐநூறு ரூபாவை எடுக்கலாம். பிள்ளையளுக்கு புதுத் தவணை தொடங்கினதாலை கொப்பியள் வாங்கவேணும். தேப்பன் இல்லாத பிள்ளையள் எண்டு அதுகளுக்கும் பள்ளிக்கூடத்திலை ஒரே பிரச்சினை தான். அண்டைக்கும் பரிசளிப்பு விழாவுக்கு எல்லாப் பிள்ளையளின்ரை தாய் தகப்பனும் வந்தவை. நான் என்ன செய்ய தனிமரமா போய் நிண் டன்.

மூத்தவளின்ரை வகுப்புப் பிள்ளையள் அவளை உங்கடை அப்பாதானே யாரோ சுட்டுச் செத்தவர் ஏன் எண்டு உனக்குத் தெரியுமோ? எண்டு கேட்டதாம் எண்டு பிள்ளை அழுது கொணடே வீடு வந்து சேர்ந்தது. இளையவனும் ஒருநாள் வந்து சொன்



கண்ணுக்கு முன்னாலை பிணமாக்கிடத்திக்கிடந்த என்ரை அவரைப் பாக்கப் பாக்க என்னால்......."
"மறக்கவே முடியாது, கத்திக் கத்தியழுதேன்.

தான் வந்தனான்"

ஏறிப்போகும் போது எனக்கு ஒண்டும் தெரியேல்லை. அவன் எனக்கும் தம்பி மாதிரி. இந்த இக்கட்டான நேரத்திலை ஏறிப் போறதிலை ஒண்டும் பிழையில்லை எண்டு நினைச்சன். மோட்டார்சைக்கிள் போன வேகத்திலையும் எங்கடை பக்கத்து வீட்டு பாக்கியமக்கா என்னைக் கண்டிட்டா.

விடியப் பிள்ளையளை பள்ளிக்கூடம் அனுப்ப வாசலுக்கு வர "என்ன வசந்தி நீ என்ன புதுப் பொம்பிளை தானே இனி யார் என்ன சொல்லப் போகினம், அவன் போய் ஒரு வருசம் கூட முடியேல்லை. நீ கெட்டிக்காரி பிள்ளையளுக்கும், வயித்துப் பாட்டுக்கும் நல்ல கொம்பா தான் பிடிச்சிருக்கிறாய்"

கேட்டவுடனேயே நெஞ் செல்லாம் எரியுற மாதிரி இருந்தது. தலையே சுழரத் தொடங்கியது. என்ன மாமி நீங்கள் என்று சொல்ல வாயெடுத்தேன் வார்த்தைகள் வெளியே வரவேயில்லை. தலைக்குள்ளை இறுக்கி ஆணி அடிச்சமாதிரி ஒரு வலி யெடுத்தது. கடவுளே! என்று மனம் அழுதது. பூமி சுத்தியது தெரிந்தது, கண்ணுக்குள் புகை படலம் ஒன்று தெரிந்தது. நிலத் தில் சரிந்து விழுந்து விட்டேன். சிரித்த முகத்துடன்,"வசந்தி வா அழாதை நான் இருக்கிறன. . ."என்று அவர் கூப்பிடுவது கேட்டது.

**அடுத்தவாரம், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும்,அந்தப் பெண்களுக்கு வழங்கப்படவேண்டிய உள சமூக ஆதரவு பற்றியும் ஒரு நேர்காணல் வெளிவரும்.**



"எனக்கு முகமெல்லாம் வேர்த்து ஒரே படபடப்பா இருந்தது."

"போனுக்கு கோல் எடுக்கவும் போன் ஓவ் என்று சொல்லிக் கொண்டேயிருந்திச்சு"

"பின்னேரம் வரைக்கும் தேடியும் காணேல்லை, அழுது அழுது நான் ஓய்ந்து போய் இருந்தேன்."

அடுத்த நாள் தான் விசயம் தெரிய வந்தது. காலையிலை பிள்ளையைக் கூட்டிக் கொண்டு சந்தோசமா வெளிக்கிட்ட மனிசன், பிணமாத்தான் வீடு வந்து சேர்ந்தது.

"சும்மா இருந்த மனிசனை கொன்று போட்டாங்கள்," "நாங்கள் ஒருத்தரின்ரை சோலிக்கும் போறதில்லை"."இந்த மனிசனும் எந்தப்பிரச்சினைக்கும் போறதில்லை"

"துரத்தித் துரத்தி, நானில்லை... என்று கத்தக் கத்த, என்ரை மனிசனை, பாழ்பட்டுப் போவார் என்னட்டை இருந்து பறிச்சு எடுத்திட்டாங்கள்..." "கண்ணுக்கு முன்னாலை பிணமாக்கிடத்திக்கிடந்த என்ரை அவரைப் பாக்கப் பாக்க என்னால்..."

என் சொந்தங்கள் இரண்டு நாளில் தூரமாகிவிட்டனர்.

திடீரென்று நடந்த அவரின் இழப்பில் எனக்கு ஏராளமான சுமைகள், சுமக்க முடியாமல் மனதுக்குள் அழுதேன்.

பிள்ளைகளை எப்பிடி ஆளாக்கப் போறேன்?,

காசுக்கு என்ன செய்யப் போறேன்?,

அவரின்ரை இழப்பை எப்படி சமாளிக்கப் போறன்? ஆடிப் போய் விட்டேன்.

"இதை விட எனக்கு இவரின்ரை அந்த முகத்தையும கடைசியாப் போகேக்கை அவர் சாப்பிடாமல் போனதும், மனதுக்குள்ளை அப்பிடியே படிஞ்சிட்டுது" "அண்டையோடை தோசை சுடுறதை விட்டிட்டன். இரவிலை அடிக்கடி அவர் கனவிலை வருவதும், நான் அவரின் கையைப் பிடித்துக் கொண்டு...

"என்னாங்கோ என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோ" என்று அழுவதும், நித்திரையின்றி தவிப்பதும் வழக்கமாகிவிட்டது. என்ன கிழமையெண்டாலும் காலமை குளிச்சு கோயிலுக்குப் போயிட்டு,

"என்னை அந்தாள் ஒன்றுக்கும் ஒருத்தரிட்டையும் விடாமல், தானே தான் எல்லாத்தையும் செய்தது"."சொந்தக்காரர் வீட்டுக்குக் கூட தானே தான் ஏத்திக் கொண்டு போகும்."

"அப்பெல்லாம் நான் நினைச்சனானே! இப்பிடி தனியக் கஷ்டப்படுவன் எண்டு. சின்னச் சின்னக் கூலி வேலைக்குத்தான் போறன். அதிலை கிடைக்கிற வருமானம்என்னத்தைக்காணும். பிள்ளையளும் தகப்பன் இல்லையெண்டு பாவம் ஒண்டும் கேக்குறதில்லை.

"அம்மா நாங்கள் வளர்ந்து பெரியாக்களாகி, உங்களை நல்லா பாத்துக் கொள்ளுவம். அம்மா! நீங்கள் யோசிக்கா தேங்கோ" எண்டுதான் சொல்லுதுகள்.

நான் என்ரை மனிசனை இழந்தது, இழந்தது தானே? அதை ஆர் தீர்த்து வைக்கிறது? 32 வயதிலை நான் இப்பிடி இருக்கோணும் என்டு என்ரை தலையெழுத்து!

"வேலை செய்யுறதும் ஒண்டும் பெரிய விசயமில்லை. எங்கடை ஆக்கள் சொல்லுற கதையளையெல்லாம் கேட்டுக் கொண்டு வேலை செய்யுறது தானே கஷ்டம்"."நானும் முடிஞ்சவரைக்கும் என் துன்பங்களை மறக்க நினைக்கிறேன். சுமைக்கு மேலை சுமை கூடிக் கொண்டிருக்குதே தவிர எதையும் மறக்கவும் முடியவில்லை. [illegible]

னவன் "அம்மா ரீச்சர் கொழும்புக்கு டூர் போக அப்பாவைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னவ. எல்லாரும் போகினம் நான் என்னம்மா செய்யுறது எண்டு அழுது கொண்டேயிருந்தவன்.

எல்லாத்தையும் யோசிச்சு செய்த நான், நேரம் போனதை மறந்து போனன்.

"நல்லா இருட்டிப் போட்டுது. இருட்டுக்குள்ளாலை வரவே பயமாத்தான் கிடந்தது"."அது என்னவோ இருட்டு அண்டைக்கெண்டு நல்ல கறுப்பா பயங்கரமா இருந்தது"."யோசனையோடை வந்த எனக்குப் பக்கத்தில ஒரு மோட்டார்சைக்கிள் வந்து நிண்டது." ஐயோ! எண்டு திடுக்கிட்டுப்போனன. நிமிர்ந்து பாத்தா எங் கடை இவரின்ரை ஒண்டவிட்ட தம்பி சுரேஸ்.

"அட நீயேடா தம்பி நான் ஆரோ எண்டு நினைச்சு பயந்திட்டன், சரி என்னை வீட்டை ஒருக்கா இறக்கி விடு.

"சரி ஏறுங்கோ நான் உங்களை ஏத்திக் கொண்டு போகத்

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும். அனுப்ப வேண்டிய முகவரி:

சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

E.mail:psych@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் மனநிலை சர்வாதிகாரப் போக்குடையது

**ஆடிய ஆட்டம் என்ன?**
**பேசிய வார்த்தை என்ன?**
**தேடிய செல்வம் என்ன?**
**திரண்டதோர் சுற்றம் என்ன?**
**கூடுவிட்டு ஆவிபோனால்**
**கூடவே வருவதென்ன?**

மகா அலெக்சாண்டர் இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மாமன்னன்.

ஒருநாள் தன் தளபதியை அழைக்கின்றான்.

தளபதியே! நாளை அதிகாலை வேளை எனது உயிர் பிரிந்துவிடும். எனது உயிர் பிரிந்ததும் என் உடலை மயானத்திற்குக் கொண்டு செல்லும்போது எனது இரண்டு கைகளும் வெளியில் தெரியுமாறு என் உடலை எடுத்துச் செல்லுங்கள் என்கின்றான்.

இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் எதற்காகத் தனது இரண்டு கைகளும் வெளியில் தெரியுமாறு உடலை எடுத்துச் செல்லப் பணிக் கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத தளபதி ஏன்? மன்னா! என்று வினவுகிறான்.



அதற்கு மகா அலெக்சாண்டர் ''இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டரும் போகும்போது வெறுங்கையோடு தான் போகின்றான் என்பதை இனிமேலாவது இந்த உலகம் புரிந்து கொள்ளட்டும்'' என்று பதிலளிக்கிறார்.

மரணத்தின் முதல்நாள் மகா அலெக்சாண்டருக்கு ஏற்பட்ட (மெய்) ஞானம் இந்த உலகில் வாழ்கின்றவர்களுக்கு மிகப் பெரிய தத்துவமாகும்.

எனினும் இத்தத்துவத்தை உணர்ந்து கொள்வதென்பது முடியாத காரியமாகவே இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப் போன மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்தபோது என்ன நினைத்தார், எப்படியெல்லாம் நடந்துகொண்டார் என்பதை இந்த உலகம் நன்கு அறியும்.

ஒருநாட்டின் தலைவனாக இருக்கக்கூடியவன் முதலில் நிதானமாக நடந்து கொள்ளும் ஆளுமையைப் பெற்றிருக்க வேண்டும். எனினும் மகிந்த ராஜபக்ஷ கடும்கோபம் மிக்கவராக- எவரையும் தூக்கி எறியும் மனநிலையுடையவராக இருந்தார்.


தனது சகோதரர்கள் பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று பிள்ளைகள் தன்னோடு இருந்தால் போதும் இந்த நாட்டை தான் ஆள்வதற்கு என்று மகிந்த நினைத்ததன் விளைவே தேர்தலில் அவர் அடைந்த தோல்வியாகும்.

### சந்திரிகாவை பகைத்திருக்கக்கூடாது

சந்திரிகா குமாரதுங்கவிற்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டவர் மகிந்த ராஜபக்ஷ. தேர்தலில் வெற்றியீட்டிய மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்றதும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கடுமையாக வஞ்சித்தார்.

இந்த நாட்டில் வாழ்வது ஆபத்தானது என்று நினைக்குமளவில் சந்திரிகாவின் நிலைமை இருந்தது. மகிந்த ராஜபக்ஷவால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று தனது பிள்ளைகள் தன்னை எச்சரித்ததாக அண்மையில் சந்திரிகா கூறியிருந்தமை இங்கு ஈண்டு நோக்குதற்குரியது.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமராக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ. இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாசறையில் வளர்ந்தவர்கள்.



# பண்டா செய்த உதவியை மறந்து சந்திரிகாவை பழி தீர்த்த மகிந்த

அதிலும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவே, மகிந்தவின் தந்தை ராஜபக்ஷவுக்கு கட்சியில் இடம் கொடுத்து பாராளுமன்றம் செல்வதற்கும் வழிச மைத்தார்.

இப்படியான உதவிகளை எல்லாம் பண்டாரநாயக்க குடும்பம் செய்திருந்த போதிலும் அவற்றையெல்லாம் மறந்து போன மகிந்த, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை எந்தளவுக்கு கீழ்நிலைப்படுத்த முடியுமோ அந்தளவிற்குத் தனது இழி செயலைச் செய்துமுடித்தார்.



மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இலங்கையில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற சந்திரிகா குமாரதுங்கவிற்கு மண்டபத்தில் ஆசனம்கூட ஒதுக்கப்படவில்லை.

கதிரைக்காக சந்திரிகா அம்மையார் அலைந்ததைப் பார்த்து மகிந்த ராஜபக்ஷ உள்ளூர சிரித்துக் கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே தனது ஆசனத்தை சந்திரிகாவுக்கு விட்டுக்கொடுத்தார் என்பது நடந்து முடிந்த கதை.

தனது குடும்பம் இந்தளவு தூரம் பதவிக்கு வருவதற்கு பண்டாரநாயக்கவே காரணம் என்று நினைத்திருந்தால், சந்திரிகாவுக்கு இத்துணை கொடுமைகளை மகிந்த ராஜபக்ஷ இழைத்திருக்கமாட்டார்.

### ஜனநாயகப் பண்பு மகிந்தவிடம் இருக்கவில்லை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஜனநாயகப் பண்புகள் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டன. ஜனநாயகப் பண்பு என்பதன் வரையறைகள் எவை என்ற ஐயம் எழுமாயின் எங்கள் மொழியில் மகிந்த ராஜபக்ஷவிடம் **இரக்கம்** என்பது மிகக் குறைவு என்று கூறிவிடலாம்.

இந்த உலகில் சர்வாதிகார ஆட்சி நடத்தியவர்களின் இயல்புகளைப் பார்க்கும்போது கோபமும் இரக்கமற்ற மனநிலையும் அவர்களிடம் மலிந்திருந்ததைக் காணமுடியும். அத்தகையதொரு இயல்பு மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்தது. இதற்குச் சான்றாதாரங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்ட முடியும்.

வன்னி யுத்தம் நடந்தபோது அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்புப் பற்றி மகிந்த ராஜபக்ஷ இம்மியும்கவலை கொள்ளவில்லை. மகிந்தவிடம் இரக்ககுணம் இருந்திருக்குமாயின் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் யுத்தத்தில் பலியாகியிருக்கமாட்டார்கள்.

வன்னி யுத்தம் நடந்தபோது வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிய சர்வதேச தொண்டு நிறுவனங்களை உடனடியாக வெளியேறுமாறு மகிந்த அரசு உத்தரவிட்டது.

வன்னிப்போரில் அகப்பட்ட தமிழ்மக்கள், எங்களைக் காப்பாற்றுங்கள்; எங்களுக்கு உதவியாக இருங்கள் என்று சர்வதேச அமைப்புக்களைக் கையேந்திக்கேட்ட போது,

வன்னியை விட்டு வெளியேறத் தாமதித்தால் உங்கள் மீது போர் விமானங்கள் தாக்குதல் நடத்தும் என்று மகிந்த அரசு எச்சரிக்க, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தென்பகுதி நோக்கி விரைந்தன.

தமக்கு எந்த எதிர்ப்பும் இருக்கக் கூடாது என்ற மனநிலை சர்வாதிகாரிகளுடையதாகும். அத்தகையதொரு நிலைப்பாடு மகிந்தவிடமும் இருந்தது.

2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா போட்டியிட்டார். தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார் என்ற அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

அவ்வளவுதான். தன்னை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவுக்கு எப்படியெல்லாம் தண்டனை கொடுக்க முடியுமோ; அப்படியெல்லாம் தண்டனை வழங்கினார் மகிந்த.

தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றதற்காக இப்படியொரு தண்டனை வழங்கலாமா? என்றால், தன்னை எதிர்த்து யார் போட்டியிட்டாலும் இதுதான் நிலைமை என்பதை நாட்டிற்குச் சொல்லவே மகிந்த ராஜபக்ஷ சரத் பொன்சேகாவிற்கு அப்படிச் செய்திருந்தார்.

பொன்சேகாவின் ஆயுள் சிறையிலேயே முடிந்து போகட்டும் என்பது மகிந்தவின் நிலைப்பாடாக இருந்த போதிலும், அமெரிக்காவின் தலையீடு காரணமாக சரத் பொன் சேகாவுக்கு விடுதலை கிடைத்தது.

இத்தகைய பழிவாங்கல் மனநிலையில் இருந்த மகிந்தராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு வெளி யேறுவதற்கு முன்னதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு; புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி ஏற்பதற்கு வசதியாக அலரி மாளிகையை விட்டு நான் வெளி யேறுகிறேன் என்று கூறியிருந் தார் எனில், அதற்குள்;

என்னைக் கைது செய்துவிடாதே! மன்னித்துவிடு! என்று இறைஞ்சுவதான பொருள் உள்ளதல்லவா?

இப்படித்தான், பழி தீர்க்கும் மனமும்; கோபாவேஷமும்; இரக்கமற்ற மனநிலையும் உள்ளவர்கள் தோல்வி வரும்போது, மிகப் பயந்தவர்களாக- எதிரியிடம் மன்னிப்புக் கேட்பதற்கும் தயங்காதவர்களாக இருப்பர். இதற்கு மகிந்தவும் ஒரு நல்ல உதாரணம் எனலாம்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்தை இலகுபடுத்த பாலத்தை புனரமையுங்கள்

## வள்ளுவர் பண்ணை கிராமமக்கள் கோரிக்கை


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வள்ளுவர் பண்ணை கிராமத்திற்கான போக்குவரத்து வீதியில் பாலம் அமைக்கப்படாமையால் மேற்படி கிராமத்தில் வசிக்கும் 70இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்தின் போது இடையூறுகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களுக்கு முன்னர் குறித்த பாலம் இரும்புக் கேடர்களினால் 3 அடி அகலமுள்ளதாக அமைக்கப்பட்டு மக்களின் போக்குவரத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இன்றுவரையும் இரும்புக் கேடர்களினால் அமைக்கப்பட்ட இப்பாலத்தினூடாகவே மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்பாலமானது தற்போது வாகனங்கள் எதுவும் பயணிக்க முடியாத நிலையில் பலத்த சேதமடைந்துள்ளது.



குறிப்பாக அக்கிராமத்து மக்கள் தமக்கான வீட்டுத்திட்டத்திற்குரிய கட்டடப் பொருட்களை கொண்டு செல்லமுடியாதுள்ளதுடன் தமது வாழ்வாதார தேவையின் நிமிர்த்தம் தம்மிடமுள்ள உழவு இயந்திரங்கள் ,முச்சக்கர வண்டிகள் என்பவற்றை அயல் கிராமங்களுக்கு கொண்டு சென்று வேலை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

முறிப்பு குளத்தின் நீர் மட்டம் குறைவடையும் நிலைகாணப்படும்போதே அக்கிராம மக்கள் தமது போக்குவரத்தினை இப்பாலத்தின் அருகில் காணப்படும் வயல் பாதையூடாக சென்று வர முடியுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சீரான பாலம் கட்டப்படாமையால் ஒவ்வொரு மாரி காலத்திலும் இப் போக்குவரத்தில் பிரச்சினையை தாம் எதிர் கொள்வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இப்பாலத்தை சீர்செய்து போக்குவரத்தை இலகுபடுத்தித் தர வேண்டுமென அக்கிராமமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)

# தற்காலிக கொட்டகைகளில் வாழ்கின்றோம்.

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முத்தையன் கட்டு இடதுகரை 18 ஏக்கர் பகுதியில் வாழ்ந்து வரும் 24 குடும்பங்களுக்கென அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லையென அம்மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் காடாக இருந்த 18 ஏக்கர் பகுதியை சுத்தம் செய்து வீடுகள் அமைத்து வாழ்ந்து வருகின்றோம்

அன்று தொடக்கம் இன்று வரை காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. வன்னியில் இடம் பெற்ற யுத்தம் காரண மாக இடம் பெய்ர்ந்து மீண்டும் மீள்குடியேறி 5 வருடங்கள் கடந்த போதும் காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லையென அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் தெரியப்ப டுத்தியும் தீர்வு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.



மீள்குடியேறியவுடன் ஆறுமாத காலத்திற்கு என வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலேயே இன்று வரை வாழ்ந்து வருகின்றோம்.அவை தற்போது வெயில் மற்றும் மழையின் தாக்கத்தினால் சேதமடைந்துள்ளதாகவும் மழை பெய்யும் போது தாம் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இக்காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாமையினால் நிரந் தரவீட்டுத் திட்டமோ மின்னிணைப்போ எதுவும் அற்ற நிலையில் குப்பி விளக்கின் கீழ் வாழ்ந்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.இவற்றிற்கு உரிய அதிகாரிகள் தீர்வைப் பெற்றுதந்து ஏனைய குடும்பங்கள் போன்று வாழ்வதற்கு வழி சமைத்துதருமாறு அம்மக்கள் கேட்கின்றனர். (2-281)




# மோட்டார் சைக்கிள் மோதி மூவர் படுகாயமடைந்தனர்

(கனகபுரம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவ்விபத்து நேற்றுக்காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு வீதி பரந்தனைச் சேர்ந்த முருகையா (வயது-68) புத்தூர்,நவக்கிரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான சு.பராசக்தி (வயது-68), லோ.சபேசன் (வயது-28) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்இ

இது தொடர்பாக தெரியவருவதாவது, பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றன்பின் ஒன்றாக ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்தன.

இதன் போது முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள கணேசபுரம் வீதியை நோக்கி திரும்ப முற்பட்ட வேளை பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் இவ்விபத்து நேர்ந்தது. இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டனர்.(2-259)

# விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் உயிரிழப்பு

## ஒருவர் படுகாயம்

(மன்னார்)

போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் தந்தையும் மகனும் தலை சிதறிப் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தில் இடம்பெற்றது.

இதில் வஞ்சிகம் குளத்தைச் சேர்ந்த எஸ்.சத்தியதாஸ் (வயது 50), எஸ்.சரோன் (வயது 11) ஆகியோரே மரணமடைந்தவர்களாவர்.




இதன் போது இவர்களின் உறவினரான ஜோசப்வாஸ் ஜெரிஸ் (வயது 14) என்பவர் படுகாயமடைந்தார். இது தொடர்பில் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் மன்னார் பாலத்தைக் கடக்க முற்பட்டவேளை வவுனியாவுக்கு பயணித்த பேருந்துடன் மோதியே விபத்துக்குள்ளாகினர். இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் ஸ்தலத்திலேயே பலியாகினர். அவர்களுடன் பயணித்த உறவினரான சிறுவன் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணையை நடத்தியதுடன் பேருந்தின்சாரதியையும்கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியவர்க்கு சத மரணம். அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம்.
- சுவாமி விபுலாநந்தர்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நெற்றிக்கண் காட்டினும் குற்றமே - கீரன் குற்றமாயின் நெற்றியில் சுடு - தேசப்பிரிய

இலங்கை மண்ணில் ஜனாதிபதித் தேர்தல் மிகவும் சுமுகமாக நடந்து முடிந்தமை ஆச்சரியமான விடயமே.

இந்த நாட்டின் ஆட்சியை யாரிடமும் ஒப்படைக்க மாட்டேன் என்ற நிலைப்பாட்டில் இருந்த மகிந்த ராஜபக்ஷ அதிகாலை வேளையில் அலரி மாளிகையை விட்டு வெளியேறியமை அதிசயமாயினும் அதுவே உண்மை என்றாயிற்று.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தால் மகிந்த ராஜபக்ஷ எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் அதனை முறியடிப்பதற்கு தேவையான அழுத்தங்களைக் கொடுக்க அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தயாராக இருந்தன.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ஆகியோரின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முப்படைத் தளபதிகள் மறுப்புத் தெரிவித்ததன் காரணமாகவும் மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு மரியாதையாக வெளியேறினார் என்று கூறலாம்.

அதேநேரம் மகிந்தவின் திட்டத்தை முப்படைத் தளபதிகள் அடியோடு மறுத்தமைக்குக் காரணம் என்ன? இதன் பின்னணியில் இருந்த சக்தி எதுவென்ற கேள்விகளுக்கான பதிலைத் தேட, தனியான ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தல் சுமுகமாக நடப்பதற்கு மூல காரணமாக இருந்தவர் இந்த நாட்டின் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய.

ஜனாதிபதித் தேர்தலை நீதியாக நடத்த வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்த போது தேர்தல் ஆணையாளராக தயானந்த திஸநாயக்க இருந்தார். எனினும் அப்போது அவரின் இறுக்கம் போதாதென்று கூறும் அளவிலேயே நிலைமை இருந்தது.

ஆனால் 2015 ஜனவரி எட்டாந் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மிகவும் துணிச்சலோடு செயற்பட்டார். எது நடந்தாலும் அதனைப்பற்றி பரவாயில்லை. தேர்தலை நீதியாக நடத்தியே ஆகுவது என்பதில் தேர்தல் ஆணையாளர் மிகவும் உறுதியுடன் இருந்தார்.

கள்ள வாக்குப் போடுபவர்களுக்கு நெற்றியில் சுடுமாறு பொலிஸாருக்கு தேர்தல் ஆணையாளர் விடுத்த உத்தரவு சாதாரணமானதல்ல. பொதுவில் கள்ள வாக்களிப்பில் யாரேனும் ஈடுபட்டால் அவர்கள் கைது செய்யப்படுவர். சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி வரும் என்ற எச்சரிக்கைகளையே தேர்தல் ஆணையாளர் விடுவது வழமை.

ஆனால், இம்முறை நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கள்ளத்தனமான வாக்களிப்பில் யாரேனும் ஈடுபட்டால் அவர்களுக்கு நெற்றியில் வெடி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய விடுத்த உத்தரவு கள்ளத்திட்டம் தீட்டுபவர்களுக்கு குல நடுக்கத்தை ஏற்படுத்தியது.

அதுமட்டுமன்றி ஆணையாளரின் அறிவிப்பால் தேர்தல் மோசடியில் ஈடுபட இருந்தவர்களும் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நினைத்து ஓடத் தொடங்கினர்.

நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்று வாதாடினார் நக்கீரர். ஆனால் வாக்களிப்பில் யார் குற்றம் செய்தாலும் நெற்றியில் சுடு என்பது மகிந்த தேசப்பிரியவின் உத்தரவு.

சிவனாயினும் குற்றம் குற்றமே என்பது நக்கீரரின் முடிவு. பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் தரப்பாயினும் வாக்களிப்பில் குற்றம் செய்தால் நெற்றியில் வெடி வைத்தாக வேண்டும் என்பது தேர்தல் ஆணையாளர் தேசப்பிரியவின் முடிவு.

நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரனும் கள்ள வாக்களிப்பில் ஈடுபடுவோருக்கு துப்பாக்கியால் அவர்களின் நெற்றியில் சுடுங்கள் என்று அஞ்சா நெஞ்சுரத்துடன் பொலிஸாருக்கு உத்தரவிட்ட மகிந்த தேசப்பிரிய போன்றவர்களும் இந்த நாட்டிற்கு அதிகம் தேவையாக உள்ளனர்.

# மாற்றத்தை விரும்பிய மக்களது மனங்களுக்கு மதிப்பளிப்போம்

## முன்னாள் எம்.பி. ஜெகன் அறிக்கை

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இலங்கைத்தீவின் அரசியல் மாற்றத்திற்கான களமாக அமைந்துள்ளது. இது ஒட்டுமொத்த இலங்கை மக்களது எதிர்பார்ப்பாக இருந்தது.

மாற்றத்தை விரும்பிய மக்களது உணர்வுகளுக்கு நாம் தலை வணங்குகின்றோம். எமது கோரிக்கையை ஏற்று வாக்களித்த எமது ஆதரவாளர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாற்றத்தினூடாக அவர்கள் தேடுகின்ற எதிர்பார்ப்புகளுக்கு, பதவியேற்றுள்ள இந்த புதிய ஜனாதிபதியினூடாக தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் வழிகளை விரைவுபடுத்தி தமிழ் மக்களது உரிமைகளுக்கும் வாழ்வியல தேவைகளுக்கு நிரந்தரமாக தீர்வுகளை பெற்றுத்தரும் தார்மீக கடமைகளை அனைவரும் மேற்கொள்ளவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அநத அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் 6 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மைத்திரி பால சிறிசேனவுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினராகிய நாம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாற்றத்தினூடாகத்தான் எமது நாட்டின் நிலைமைகளை மாற்றியமைக்க முடியும் என இலங்கை வாழ் மக்கள் விரும்பியதன் வெளிப்பாடு தான் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் பெறுபேறாக அமைந்துள்ளது. இது எமது நாட்டின் வளர்ச்சிப்பாதையின் புதிய ஆரம்பமாக அமையுமென எதிர் பார்க்கின்றோம்.

இன்று ஏற்பட்டுள்ள மாற்றமானது தேசிய அரசியலில் மட்டும்தான் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. எந்த வகையிலும் இது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கான மாற்றமாக எவரும் கருதிவிட வேண்டாம். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் தூரநோக்குடன் வீணைச் சின்னத்துடன் நாங்கள் எதிர்கால மக்கள் சேவைகளை மேற்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

நாங்கள் என்றும் அரசியல்வாதியாக இருந்தது கிடையாது. அரசியல் போராளிகளாகவே எமது மக்கள் மத்தியில் சேவைகளைச் செய்து வருகின்றோம்.

தோற்றவர்கள் ஜெயிப்பதும் ஜெயிப்பவர்கள் தோற்பதும் உலக நீரோட்டத்தில் இயற்கையானதுதான். இதுதான் உண்மையும் கூட. இந்த உண்மையை எவரும் மறந்துவிடக்கூடாது. இன்று எம் அனைவர் முன்னும் உள்ள விடயம் மக்களது உரிமைகளும் வாழ்வியலும் அவர்களது எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றுவதாக மட்டுமே இருக்க வேண்டும்.

மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எமது மக்களின் உரிமைகள் மீது யார் அதிகம் அக்கறை காட்டுகிறார்களோ அவர்களுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு எமது மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ள நாங்கள் தயாராகவே உள்ளோம். பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும் மத்தியில் இணக்கமான ஒரு அரசியலையே இதுவரை காலமும் மேற்கொண்டு வந்துள்ளார். அதையே தொடர்ந்தும் மேற்கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

மக்கள் மாற்றத்தை விரும்பினாலும் மக்களது எதிர்பார்ப்புகளை வெற்றியீட்டிய சில நிமிடங்களிலேயே புதைந்து போகச்செய்யும் செயற்பாடுகள் குடாநாட்டின் பல பாகங்களில் ஒரு சிலர் மேற்கொண்டு வருவது வேதனையாக உள்ளது.

வெற்றி பெற்றவர்கள் தமது வெற்றியை கொண்டாடுவது இயல்பானது தான். வெற்றிக்களிப்பில் பட்டாசு கொளுத்துவது இன்று மக்களிடையே கலாசாரமாகிவிட்டது.

அந்த வெடியோசைகள் விரோதங்களை தூண்டிவிடுவதாக ஒருபோதும் அமைந்துவிடக்கூடாது. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் வெற்றிக்கு காரணமற்றவர்கள் வெற்றிக்கு உரிமை கொண்டாடி அதில் குளிர் காய்ந்து மற்றவர்களது உணர்வுகளை தூண்டி விடும் செயற்பாடுகளை மேற்கொள்வது மீண்டும் பிரச்சினைகளை வளர்ப்பதற்கு வழி கோலுவதாகிவிடும். ஒவ்வொருவரும் தாங்கள் கொளுத்துகின்ற வெடிகள் தம்மை சுடாதிருக்க பாதுகாத்துக் கொள்வதும் மிக அவசியமானதாக இன்றைய சூழலில் உள்ளது என அவா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# "மீட்புப் பணியில் பங்காற்றும் பங்காளிகளாக மாறி புதுவாழ்வு வாழ்வோம்"

இன்று எமக்குத்தரப்படும் பைபிள் பகுதி இயேசுவின் திருமுழுக்கு பெற்ற நிகழ்வை எமக்கு கூறுகின்றது. இது மாற்கு நற்செய்தி 2:22-40 பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்றது. திருமுழுக்கு அருளப்பரின் புரட்சிமிகு கருத்துக்களே இயேசுவின் திருமுழுக்குக்கு உறுதுணையாயின எனலாம். இயேசுவிற்கு ஆறுமாதங்கள் வயதில் மூத்தவரான திருமுழுக்கு யோவானே இறுதியாக வந்த இறைவாக்கினர் ஆவார். இயேசுவின் வழியை ஆயத்தப்படுத்துவதே இவரது பணியாக இருந்தது.

இன்று நாம் இயேசுவின் திருமுழுக்கைப் பற்றிச் சிந்திக்கின்றோம். 'மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது"என்று ஜோர்தான் நதியோரம் அறைகூவல் விடுத்த திருமுழுக்கு யோவானின் அந்த அழைப்பு இயேசுவைக் கவர்ந்தது எனலாம். சட்டங்

### பரமபிதா காட்டிய பாதை

களையும் சடங்குகளையும் உயர்த்திப் பிடிக்காமல் அன்பையும், நீதியையும், சமத்துவத்தையும், பகிர்வையும், வலியுறுத்திய யோவானின் புரட்சிக் கருத்துக்கள் இயேசுவின் கருத்துக்களையே ஒத்திருந்தன. அத்தகைய உண்மையை எத்திசையும் பறைசாற்றும் இறைதந்தையின் விருப்பத்திற்குப் பணிந்து மக்களோடு மக்களாக திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார் இயேசு.

30 ஆண்டுகள் அமைதியாக, நாசரேத்தூரில், தன் வேலையோடு, தன் பெற்றோரோடு இயேசு வாழ்ந்த போது, அவரைச் சுற்றி நடந்த பல அநியாயங்கள் அவர் மனதில் பூகம்பங்களாய் வெடித்திருக்கும். பாலஸ்தீனத்தின் அவலங்களையும், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், அடித்தட்டு மக்களின் அழுகுரல்களையும் அன்றாடம் கண்ணுற்றிருப்பார். இந்த அநியாயங்களுக்கு விடைதேடி இளையோர் பலர் புரட்சிக்குழுக்களை உருவாக்கியதையும், அக்குழுக்களில் சேர்ந்ததையும் இயேசு அறிந்திருப்பார். தீவிரவாதமும், வன்முறையும் தான் தீர்வுகளா? வேறு வழிகள் என்ன? என்று அவரும் கட்டாயம் சிந்தித்திருப்பார்.

இந்தச் சிந்தனைகளுக்கும் கேள்விகளுக்கும் விடையாக, அவர் எடுத்த முதல் முடிவு. மக்களோடு மக்களாகத் தன்னைக் கரைத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவு. அந்த முடிவோடு, அந்த முனைப்போடுதான் ஜோர்தான் நதியில் இயேசு இறங்கினார்.

இயேசு பாவமற்றவர் இந்த திருமுழுக்கின் வழியாய் மனமாற்றம் அவருக்குத் தேவையில்லை. ஆயினும் நம்முடைய பலவீனங்களில் துணையிருக்கவும் மனிதராகிய நாம் இறைபிரசன்னத்தை எப்பொழுதும் உணரவும் இயேசு மனிதராக மனிதர்களோடு தமது இறை இயல்பை பகிர்ந்து கொண்டார். இதன் மூலம் தன்னை கடவுளின் அன்புக்குரிய மகனாகவும், பாவிகளான மக்களோடு தன்னை ஒன்றிணைத்துக் கொள்பவராகவும் வெளிப்படுகிறார். மக்களோடு மக்களாகத் தன்னை முழுவதும் இணைத்துக் கொண்ட இயேசுவைக் கண்டு ஆனந்த கண்ணீர் பொங்க தந்தையாம் இறைவன் சொன்ன வார்த்தைகள்: என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்."



உன்னத இறைவன் உள்ளப் பூரிப்புடன் கூறிய இந்த வார்த்தைகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்வதற்குக் காத்திருக்கிறார். அன்னையும் தந்தையுமான இறைவன், இந்த அன்பு மொழிகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்லும்படியாக எம் வாழ்வை மாற்றுவோம்.

இயேசு பெற்ற திருமுழுக்கு மாந்தர் அனைவரையும் மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்லும் ஓர் அடையாளச் செயல். இயேசுவின் திருமுழுக்கு பாவிகள், தொழுநோயாளிகள், அடித்தட்டு மக்கள் போன்றோர்களுடன் அவருக்கிருக்கும் நெருக்கமான உறவையும் தோழமையையும் எடுத்துக்காட்டும் செயல்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

கடவுளுக்குப் பணிந்த வாழ்வு, நீதி வழுவாத வாழ்வு, அன்பு தழுவிய வாழ்வு, உள்ளத்தை தூய்மைப் படுத்தும் ஆழ்ந்த விசுவாச வாழ்வு, இவையே நம் திருமுழுக்கின் பொருள் தருவன.

புதுவாழ்வு பெற பழைய வாழ்விலிருந்து விடுதலை பெறவேண்டும். எனவே நாமும் மீட்புப்பணியில் பங்காற்றும் பங்காளிகளாக புதுவாழ்வு வாழ வேண்டும். தயாராவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் தயார்

## ஜனாதிபதிக்கான வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு






(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் உறுப்பினர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று நேற்று முன்தினம் மாலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துக்கள் குவிந்தவண்ணமுள்ளன.

### எட் மிலிபான்ட்

புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள பிரித்தானிய தொழிற்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எட் மிலிபான்ட், இலங்கையை சுபீட்சமும் ஒளிமயமானதுமான எதிர்காலத்தை நோக்கி அவர் முன்நகர்த்திச் செல்லவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைதியானதும், சுபீட்சமானதுமான இலங்கையை கட்டி எழுப்புவதற்கு புதிய அரசாங்கத்தினை பிரித்தானிய அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

இந்த செயன் முறையானது இலங்கையில் வாழும் சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கான சுதந்திரமான சர்வதேச பொறி முறையை உருவாக்குவதன் மூலமே நீதியுடனும், கௌரவத்துடனும், நிலையான சமாதானத்துடனுமான பாதையை தோற்றுவிக்க முடியும் என பிரித்தானிய தொழிற்கட்சி வலியுறுத்தி வருகின்றது என்றார்.

### கனடா

அதிகாரப்பகிர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய கரிசனைகளை தீர்ப்பதற்கு புதிய ஜனாதி பதியாக பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு முக்கிய மான வாய்ப்பாக இது அமையும் என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரி வித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மை கொண்ட, பொறுப்பு வாய்ந்த, பன்முகத் தன்மை கொண்ட அரசாங்கம் ஒன்றுக்கான ஆணையை இலங்கை மக்களிடம் இருந்து மைத்திரிபால சிறிசேன பெற்றுள்ளார் என்பது எமது நம்பிக்கை.

தேர்தல் செயல்முறையில் முக்கிய பங்காற்றிய சிவில் சமூகத்தின் பணியை நாம் பாராட்டுகிறோம் என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

### பிரான்ஸ்

அதேபோன்று, ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகளுக்கு மதிப்பளித்தலை நோக்கி புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையை முன்நகர்த்திச் செல்வார் என்று பிரான்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆட்சிமாற்றம் குறித்து பிரான்ஸ் வெளிவிவகார மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கும் பிரான்சுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் அடுத்த சில மாதங்களுக்குள் வலுப்படுத்தப்படும் என்று நம்புகிறோம் என்றும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நோர்வே

இலங்கையில் நல்லிணக்கம், சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவத் தயாராக இருப்பதாக நோர்வே தெரிவித்துள்ளது. அத்துடன், இலங்கை மக்களுக்கும், புதிய ஜனாதிபதிக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக வும் நோர்வேயின் பிரதமர் ஏர்னா சொல்பேர்க் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாக்களிப்பதற்கு தமக்குள்ள ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த தேர்தல் ஆணையாளர், கண்காணிப்பாளர்கள் உட்பட அனைவருக்கும் அவர் தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் ஜனநாயகம் நிலவும் இலங்கையை ஏற்படுத்துவதில் புதிய ஜனாதிபதியுடன இணைந்து பணியாற்றுவது குறித்து தாம் ஆர்வமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அவுஸ்திரேலியா

இலங்கையில் ஜனநாயக சீர்திருத்தம், நல்லாட்சி மற்றும் ஊழல் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவும் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் யூலி பிசப் தெரி[illegible]துள்ளார்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் இருதரப்பு மற்றும் பிராந்திய விவகாரங்களில் சேர்ந்து செயற்படுவதற்கும் அவுஸ்திரேலியா ஆர்வமாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஐ.நா. விசாரணைகளுக்கு ஜனாதிபதி உதவ வேண்டும்

## கமரூன் வலியுறுத்தல்



(லண்டன்)

புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்திரி பால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது மிகப் பெரிய வாய்ப்புகள் இருப்பதைக் கண்டேன். இந்த வாய்ப்புகளைக் கொண்டு உறுதியான, செழிப்பான, ஒன்றுபட்ட நாட்டை உருவாக்க புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ஜனாதிபதி தேர்தலை அமைதியான முறையில் நம்பகமான முறையில் நடத்திய பெருமை எல்லா இலங்கை மக்களுக்கும் உரியது. மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை ஏற்று, அமைதியான முறையில் அதிகாரத்தை ஒப்படைத்து பதவியை விட்டுச் செல்லும் மகிந்த ராஜபக்ஷவை பாராட்டுகிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள தொடர்பாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொண்டு வரும் விசாரணைகளுககு, புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன ஒத்துழைப்பு வழங்க ஊக்குவிக்கிறேன்.

கடந்தகால மனிதவுரிமை மீறல் விவகாரங்களைத் தீர்ப்பதன் மூலம் ஒளிமயமானதும், அமைதியானதுமான எதிர்காலத்தை நோக்கி நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்று பிரித்தானியப்பிரதமர் டேவிட் கமரூன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து அஜித் நிவாட் கப்ரால் ராஜினாமா செய்துள்ளதை அடுத்து, இலங்கையின் சர்வதேச வங்கியாளரான அர்ஜுன மகேந்திரன மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படலாம் என தெரியவருகிறது.

மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட கூடிய நபர்களில் அர்ஜுன் மகேந்திரன் முன்னிலையில இருப்பதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# வடக்கு ஆளுநர் இராஜினாமா?

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநராகக் கடமையாற்றும் ஜீ.ஏ.சந்திரசிறி, ஆட்சிமாற்றத்தை அடுத்து தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு அவுஸ்திரேலியாவில் குடியேறத் திட்டமிட்டுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ள அவர், இன்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வந்து தனது உடைமைகளை எடுத்துச் செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதியின் கீழ் பணியாற்ற அவர் விரும்பவில்லை என்றும், இதனால் தனது பதவியை ராஜினாமாச்செய்துவிட்டு, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அவரது குடும்பத்தாருடன் சென்று குடியேற அவர் முடிவு செய்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால, வடக்குக்கு புதிய ஆளுநர் ஒருவரை விரைவில் நியமிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த அரசியலைவிட்டு விலகவில்லை

## விமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட்டோடு விடமாட்டேன. அவர் அரசியலை விட்டு இன்னும் விலகவில்லை என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவித்துள்ளார்.

தினேஷ் குணவர்த்தன, நிமல் சிறிபால டி சில்வா, டலஸ் அழகப்பெரும, அனுர பிரியதர்ஷன யாப்பா, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச,

ஜனாதிபதி முக்கியமான விதத்தில் அலரி மாளிகையை விட்டு வெளியேறினார். அவர் வெளியேறிய சந்தர்ப்பத்தில் நாட்டில் அநேகமானோர் அழுது புரண்டார்கள். நாடு பூராகவும் கண்ணீரால் நிரம்பிக் காணப்பட்டது. அவர் அரசியலுக்கு பிரியாவிடை தரவில்லை, அவரை வீட்டோடு இருப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கையில்,

100 நாட்களில் தாம் நாட்டிற்கு செய்யவிருக்கும் திட்டத்திற்கும் நாட்டில் அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம்.

புதிய ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அவர் பதவி பிரமாணம் செய்து கொண்டதில் சில சிக்கல்கள் காணப்பட்டாலும் அது குறித்து தற்பொழுது நாங்கள் அவதானம் செலுத்தவில்லை.

100 நாள் வேலைத்திட்டத்தை நாங்கள் தடுக்க மாட்டோம். செய்யவிருக்கும் நல்ல காரியங்களுக்கு எமது முழு ஆதரவையும் வழங்குவோம் என தெரிவித்தார். (எ[illegible]

# மாலைதீவில் கோத்தபாய



(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் வெளியாகி மைத்திரிபால சிறிசேன ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சு செயலாளராக பதவி வகித்த கோத்தபாய ராஜபகஷ தனது மனைவி அயோமாவுடன் மாலைதீவுக்கு சென்றுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கால[illegible] விமானப்படைக்குச் சொந்தமான விமானத்திலேயே அவர் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ராஜபக்ஷவின் பிள்ளைகள் சீனாவிற்குச் சென்றுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு தப்பிச் செல்லேன்

## கே.பி தெரிவிப்பு

தான் நாட்டைவிட்டு தப்பிச்சென்று விட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்த கருத்து தவறானது எனவும் நாட்டைவிட்டு செல்வதற்கான எண்ணம் தனக்கு இல்லை எனவும் குமரன் பத்மநாதன் என்றழைக்கப்படும் கே.பி. தெரிவித்தார்.

தான் கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர்களை பராமரிக்கும் தன்னுடைய பணியினை செய்து வருவதாகவும் தான் நாட்டைவிட்டு ஒருபோது தப்பிச்செல்லமாட்டேன் எனவும் கே.பி. தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினரான குமரன் பத்மநாதன் என்றழைக்கப்படும் கே.பி. அதிவிசேட பிரமுகர்கள பயணிக்கும் நுழைவாயின் ஊடாக நாட்டைவிட்டு தப்பிச்சென்றுவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சிறுபான்மை மக்களை குழப்ப திரைமறைவில் சதித்திட்டம்

## ☆ அசாத் சாலி எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தை பயன்படுத்தி சிறுபான்மை மக்களை பெரும்பான்மை சமூகத்துடன் அல்லது பாதுகாப்பு தரப்புடன் சண்டை மூட்டிவிட திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது என மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த தரப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி கொண்டாட்டத்தை பயன்படுத்தி சிறுபான்மை மக்களை பெரும்பான்மை சமூகத்துடன் அல்லது இராணுவம் பாதுகாப்பு தரப்புடன் சண்டை மூட்டி விட திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவித்துள்ள அசாத் சாலி இது தொடர்பாக பாதுகாப்பு தரப்புக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் ஊடகங்களுக்கு வழங்கியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், வரும் தினங்களில் முஸ்லிம்கள் மற்றும் தமிழ்மக்களை மிக அவதானமாகவும் நிதானமாகவும் செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-11)

# நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலதா மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு சுதந்திர சதுக்கத்திலிருந்து கார் பவனியாக அத்தனகலவுக்கு ஜனாதிபதி புறப்படுவார்.

அங்கு, பண்டாரநாயக்கவின் நினைவுச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்துவார். தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு தலதா மாளிகையைச் சென்றடைவார். அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு அவர் நாட்டுமக்களுக்கு உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# புதிய அரசில் டக்ளஸ் இணைவதை கூட்டமைப்பு அனுமதிக்காது!

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அரசாங்கத்தின் அமைச்சரவையில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடம்பெறுவதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுமதிக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார்

புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றத் தயார் என கடந்த வியாழக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று புதிதாக நியமிக்கப்படும் அமைச்சரவையில் முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கிடைக்கலாம் என எதிர்வு கூறப்பட்டது.

எனினும் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் அனுமதிக்காது என சுமந்திரன் தெரிவித்தார். (எ-11)

# புலிக்கொடி...

கேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

எனினும் இந்த சம்பவத்தை மறுத்து இராணுவப் பேச்சாளர் விசேட அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சமாதானமானதொரு சூழல்நிலை காணப்படுவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் வடக்கில் எங்கும் புலிக்கொடிகள் ஏதும் பறக்கவில்லை.

இராணுவ முகாம்களின் மீது கற்களும் வீசப்படவில்லை. யாழ்.பல்கலைக்கழகத்தில் வன்முறைகளும் இடம்பெறவில்லை. அவ்வாறான செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# பாதுகாப்புச்...

கத்தின் கீழ் சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய பி.எம்.யு.டி. பஸ்நாயக்க படைத்துறை அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தில் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படுவார் என ஊகங்கள் வெளியாகியிருந்த நிலையில், அந்தப் பதவிக்கு நிர்வாக சேவையைச் சேர்ந்த பஸ்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயலாளராக பி.பி.அபேகோன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று சனிக்கிழமை காலை தனது பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-11)

# தொடரை வென்றது ஆஸி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியை இந்திய அணி போராடி சமநிலை செய்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் மோதிய 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடந்தது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்புக்கு 572 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 475 ஓட்டங்கள் குவித்தது. 97 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. இதனால் அவுஸ்திரேலியா 348 ஓட்டங்களில் முன்னிலையில் இருந்தது.

நேற்று (சனிக்கிழமை) 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து விளையாடாமல் அதே ஓட்டங்களில் 'டிக்ளேர்' செய்தது. இதனால் 90 ஓவர்களில் இந்தியாவுக்கு 349 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முரளி விஜய்யும், ராகுலும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். முதல் இன்னிங்சில் சதம் அடித்த ராகுல் 16 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். லயன் பந்தில் வோர்னரிடம் 'கேட்ச்' கொடுத்து வெளியேறினார்.

தேநீர் இடைவேளைக்கு பிறகு இந்த ஜோடி பிரிந்தது. சிறப்பாக ஆடி வந்த முரளிவிஜய் 80 ஓட்டங்களில் அவுட் ஆனார். 165 பந்துகளில் 7 பவுண்டரி, 2 சிக்சருடன் அவர இந்த ஓட்டங்களை எடுத்தார். சற்று நேரத்தில் கோலி 46 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார். அப்போது இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 201 ஆக இருந்தது. அதை தொடர்ந்து விக்கெட்டுகள் சரிந்தன. ரெய்னா (0), விர்த்திமான் சகா (0), அஸ்வின் (1) ஆட்டம் இழந்தனர். 217 ஓட்டங்களில் 7 விக்கெட்டை இழந்ததால் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்டது. அப்போது 11.4 ஓவர் எஞ்சி இருந்தது.

ஒரு முனையில் விக்கெட் விழுந்தாலும் மறுமுனையில் இருந்த ரகானே பொறுப்புடன் விளையாடி தோல்வியில் இருந்து அணியை காப்பாற்றினார் அவருக்கு புவனேஸ்வர்குமார் உதவியாக இருந்தார். இந்திய அணி இப்போட்டியை போராடி சமநிலை செய்தது. ஆட்டத்தின் முடிவில் இந்திய அணி 89.5 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 252 ஓட்டங்கள் எடுத்தது. ரகானே 88 பந்துகளில் 5 பவுண்டரியுடன் 38 ஓட்டங்களும, புவனேஸ்வர்குமார் 30 பந்தில் 20 ஓட்டங்களும் (அவுட்இல்லை) எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

சிட்னி டெஸ்ட் சமநிலை ஆனதன் மூலம் அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. முதல் மற்றும் 2 ஆவது டெஸ்டில் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது. 3 ஆவது டெஸ்ட் சமநிலை ஆனது.

சிட்னி போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர்நாயகன் விருதினை அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ஸ்மித் தட்டிச்சென்றார். (க)

# இணைந்து...

கரமாக நடத்தி முடித்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக இந்தச் செய்தியில் பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் நம்பகமான முறையில் தொழில்சார் நியதிகளை பின்பற்றி ஜனாதிபதி தேர்தலை நடத்திய தேர்தல்கள் செயலகத்துக்கு அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஏனைய வேட்பாளர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்டவர்களின் முயற்சிகள் பாராட்டுக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# அமைச்சுப்...

கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

புதிய அமைச்சவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்குமா? எனக் கேட்டபோதே, எந்தவித அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அக்கட்சி பதிலளித்துள்ளது. (எ-11)

# பதவிப்பிரமாண...

தற்காக பூங்கொத்து வாங்குவதற்கு சிறுதொகையும் சுதந்திர சதுக்கத்துக்கான மின்சார கட்டணமும் செலுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ-11)

# இந்.செல்வார்...

கொள்ளவுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் இந்திய பயணத்தை உறுதி செய்யும் விதமாக, மோடி எங்கள் ஜனாதிபதியை இந்தியாவுக்கு முதலில் வருகை தருமாறு அழைத்துள்ளார்.

இதனையடுத்து அடுத்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

# தமிழரால்...

மகிந்த ராஜபக்ஷ, அங்கு குழுமியிருந்த பெருமளவான தனது ஆதரவாளார்கள் மத்தியில் உரை நிகழ்த்தும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ, அலரி மாளிகையிலிருந்து வெளியேறி அம்பாந்தோட்டையில் மெதமுலனவில் உள்ள அவரது சொந்த வீட்டிற்கு நேற்று திரும்பியிருந்தார்.

உலங்கு வானூர்தி மூலம் தனது வீட்டை சென்றடைந்த மகிந்த ராஜபக்ஷவை பெருமளவான மக்கள் கூடிநின்று வரவேற்றதுடன், பலர் அழுதபடி தேர்தல் தோல்வி குறித்த தமது கவலையை வெளிப்படுத்தியதையும் காணக்கூடியதாகவிருந்தது.

மகிந்த குறிப்பிட்டதுபோல தென்னிலங்கையின் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மகிந்த ராஜபக்ஷ கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தார். அதிலும் அவரது சொந்த ஊரான அம்பாந்தோட்டை, காலி போன்ற கீழ் மாவட்டங்களில் அவர் எதிரணி வேட்பாளரை விட பெருமளவு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

எனினும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் தவிர்ந்த மூவின மக்களும் சேர்ந்து வாழக்கூடிய கொழும்பு பிரதேசத்தில் மகிந்த கடும் எதிர்ப்பினை எதிர்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-11)

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புத்...

சிறிசேன நியமிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, தற்போதைய படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெ ரேரா ஆகியோர் அப்பதவிகளில் தொடர்வதை புதிய அரசாங்கத் தலைமை விரும்பவில்லை எனக் கூறப்படுகின்றது. இதனால் தமது பதவிகளிலிருந்து தாமாகவே விலகிச் செல்வதற்கு அவர்கள் முன்வந்துள்ளதாக தெரியவருகின்றது.

இவர்கள் தமது பதவிகளை விட்டு விலகியதும் அவர்களது இடங்களுக்கு தனக்கு நம்பிக்கை யானவர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நியமிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ஓய்வுக்குரிய காலம் கடந்த பின்னரும் இரண்டு தடவைகள் பதவி நீடிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர ரணசிங்கவை பதவி விலகிச் செல்லுமாறு புதிய அரசாங்கத்தின் தலைமை கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆயினும் பொலிஸ்மா அதிபர் எம்.கே. இலங்கக்கோன் அப்பதவியில் தொடர்வதை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

# புதிய...

பட்டு அவருக்கான பதவி அந்தஸ்து அனைத்தும் மீளளிக்கபடும் என்றும் தெரிய வருகிறது.

புதிய அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முக்கிய பொறுப்பு ஒன்றை அளிக்க முன்வந்துள்ள புதிய அரசுத் தலைமை, ஈ.பி.டி.பி தரப்புக்கு அமைச்சரவையில் இடமளிக்காது என்றும் கூறப்பட்டது.

ஜே.வி.பி. புதிய அமைச்சரவையிலோ அரசிலோ இணைந்து கொள்ளாது என்றும் தெரிகிறது. நாடாளுமன்றின் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் அவற்றைப் பரிசீலித்து அவையவைக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஜே.வி.பி தீர்மானிக்கும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அமைச்சரவையில் சஜித் பிரேமதாஸ, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், போன் றோருக்கும் முக்கிய இடமளிக்கப்படவிருக்கின்றது.

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரன் அல்லது தேசியப் பட்டியல் உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் ஆகிய இருவரில் யாராவது ஒருவருக்கு குறைந்த பட்சம் ஒரு பிரதி அமைச்சர் பதவியாவது வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் இருந்த சிலருக்கும் முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது. (எ-11)

# மகிந்தவின்...

ஆகியோருடன் இணைந்து, நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார். கொழும்பில், இராணுவத்தினரை நிறுத்த வழங்கப்பட்ட உத்தரவை ஏற்க, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயாரத்நாயக்க மறுத்து விட்டார்.

அவசரகாலச் சட்டத்தின் மூலம், அதிகாரத்தை தக்க வைக்கும் திட்டத்தை முன்னைய அரசாங்கம் கொண்டிருந்தது.

கடைசி நேரத்தில், உயர்மட்டத்தில், இருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ஏற்க மறுத்ததன் மூலம், அரசாங்க அதிகாரிகள் அந்த திட்டத்தை தோற்கடித்து விட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், இரா ணுவத்தின் உதவியுடன் ஆட்சியில் தொடர்ந்து நீடிக்க ராஜபக்ஷ குடும்பம் முயற்சித்தது என்று கூறியிருக்கிறார். மேலும் மகிந்த ராஜபக்ஷ தோல்வியை ஏற்றுக் கொண்ட போதும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவினால் இதை தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியில் உறைந்து போனவராக இருந்ததாகவும் ஜாதிக ஹெல உறுமயவினர் கூறுகின்றனர்.

கோத்தபாய ராஜபக்ஷதான், ஆட்சியில் மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து நீடிப்பதற்கு பல வழிகளையும் கையாண்டதாகவும் கூறுகின்றனர்.

இலங்கையில் அவசரநிலை பிரகடனத்தின் மூலம் ஆட்சியில் நீடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால அட்டர்னி ஜெனரல் இதை ஏற்க மறுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல்தான் தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்துக்கே கோத்தபாய சென்று தேர்தல் முடிவுகளை நிறுத்த முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தினரின் நெருக்கடிகளுக்கு எவரும் உடன்படாத காரணத்தால் வேறு வழியின்றி அமைதியாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)


## வாழ்த்துகின்றோம்

எம்மிடம் உயிரியல் பயின்று க.பொ.த (உ/த) 2014 பரீட்சையில் 'A' தர சித்தி பெற்ற மாணவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| முழுப்பெயர் | பாடசாலை | நிலை |
|---|---|---|
| ஜெயக்குமார் அமிர்தன் | J.J.H.C | A |
| யோகராசா சாருஜன் | J.J.H.C | A |
| குகமூர்த்தி குரபரன் | J.J.H.C | A |
| கோபாலச்சந்திரன் விசாகரூபன் | J.J.H.C | A |
| பிரியந்தினி சத்தியசீலன் | J.V.G.H.S | A |
| யாழினி சிவலட்சணம் | J.V.G.H.S | A |
| சமுர்த்தியா ஸ்ரீஸ்கந்தராஜா | J.V.G.H.S | A |
| யதுர்சனா அருணகிரிவாசன் | J.V.G.H.S | A |
| பிரணவி திருலோகமூர்த்தி | J.V.G.H.S | A |
| அபிராமி சோதிதாசன் | J.V.G.H.S | A |
| வைஷ்ணவி.S | J.V.G.H.S | A |
| கஜனி தனபாலசிங்கம் | J.V.G.H.S | A |
| தாரணி கோகழிநாதன் | J.V.G.H.S | A |
| சப்தமி ஜனார்த்தனன் | J.V.G.H.S | A |
| சௌவ்யா கயரோகணன் | J.V.G.H.S | A |
| சோபனா கேசவன் | J.A.C | A. |
| ஆன்றிரோசியூட்செல்வகுணாளன் | J.C.G.C | A |
| கேதாரணி மகேந்திரன் | J.C.H.C | A |
| வர்த்தனி சருஸ்வதன் | J.C.H.C | A |
| ரூபினி நாகராசா | J.H.L.C | A |
| றொபேட் மன் ஜெனிபேட் | J.S.J.C | A |
| சந்திரகுமார் விதுசிகன் | J.S.J.C | A |
| பிரியதர்சினி இரட்ணசிங்கம் | J.U.G.C | A |
| துஷ்யந்தி செல்வகுமார் | C.R.H.C | A |
| கோபிர்த்தனா மகேஸ்வரன் | Bt.V.G.H.C | A |
| சஞ்சிகா | Bt.V.G.H.C | A |
| பானுசங்கர் சுந்தரராஜா | Mn.S.C | A |
| ஆரணி தயானந்தராஜா | Mn.S.C | A |
| தர்சிகா சுப்பிரமணியம் | Mu.M.C.C | A |
| அபினா சிவரஞ்சன் | Mu.P.C.C | A |
| ஜஸ்மிகா தேவநேசன் | N.G.H.S | A |
| மயூரி ஞானபண்டிதன் | T.S.G.C | A |
| பானுஜா ரவிதாஸ் | T.S.G.C | A |
| துவாரகா வரதராஜா | T.S.G.C | A |
| சபித்தா தயாளநேசன் | T.S.G.C | A |

உயிரியல் ஆசிரியர்கள்:- S. பொன்திவாகரன்
V. உமாசங்கர்

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna.
(சி-9800)



UK, Australia, New Zealand, Canada, America, Malaysia, Singapore
முன்னணி பல்கலைக்கழகங்களில் பகுதிநேர வேலைவாய்ப்புடன்

A/L முடித்தவர்களுக்கு (புலமைப்பரிசிலுடன்)
O/L உடன் (4 வருடங்களில்)
வெளிநாட்டுப் பட்டக்கல்வி

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புடன் வெளிநாட்டு நிரந்தர குடிரிமை
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி பொருத்தமான வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்

SIKARAM
Education Abroad, Work & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00
(சி-9795)



Personal Class-கணினி
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்:KRC



தைப்பொங்கலுக்கான விசேட கழிவு ஆரம்பம்



அனைத்து நாடுகளுக்கும் 15% off
அனைத்து பயண ஒழுங்கமைப்புகளுக்கு வீட்டிலிருந்தவாறே உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய இடம்
(சி-9802)
NATION POPULAR TRAVELS & TOURS
Colombo 0114378117 Jaffna 0214920920 Vavuniya 0244930830



Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-9761)
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393



After O/L ...
கணனி வல்லுனராவதற்கு இன்றே எம்முடன் இணையுங்கள்
Certifications Courses
* Hardware + Networking
* Advanced Network Administration
Professional Certification Courses
Microsoft Certifications
* MCSA : Windows Server 2012-R2
* MCSA : Windows 8.1
* MCSE : Server Infrastructure (2012)
Cisco Certifications
* CCNA
* CCNP
*** Unlimited Practical Hours
Next Batch Starts on Jan 2015
Conducts By: WinSYS NETWORKS
(சி-9788)
Special Discounts For O/L Students
iCS International Academy
77,மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள்கோவில் அருகில்) யாழ்ப்பாணம்.
Tel: 021 7306000 , 076 7013060



பணிநிலை வேண்டுகை
கரிகணன் தனியார் நிறுவனத்தின் விஸ்தரிப்பிற்காகப் பின்வரும் பணி நிலைகளுக்குப் பணிவேண்டுகைகள் கோரப்படுகின்றன.
விற்பனைப் பிரதிநிதிகள் / Marketing Executive (Male/Female)
திரை அச்சுப் பதிப்பாளர் / Screen Printer (Female) (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
வெல்டர்ஸ் / Welders (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
விண்ணப்பிக்க விரும்புவோர் 12-01-2015 தொடக்கம் 17-01-2015 வரை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும். (சி-9790)
கரிகணன் (தனியார்) நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2717


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org